விலை ரூபா: 8.00

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 30 திங்கட்கிழமை (15.08.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 239

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாமிடத்துத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

# பீற்றர்ஸன்-பாலா நேற்று லண்டனில் முக்கிய பேச்சு!



## முக்கிய விடயங்கள் ஆராய்வு

(லண்டன்)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கும் நோர்வே அரச பிரதிநிதிகளுக்குமிடையே நேற்று லண்டனில் முக்கிய பேச்சுவார்த்தை இடம்பெற்றது.**

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் சர் விடார்ஹெல்கீசன் ஆகியோர் லண்டனில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர்.

இலங்கையின் சமாதான முயற்சி நிலைமை, பொதுக்கட்டமைப்பின் செயற்பாடு,வடக்குக்கிழக்கின் தற்போதைய நிலைமை மற்றும் அரசியல் நிலைபரங்கள் குறித்து இச் சந்திப்பின்போது நீண்டநேரம் ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

கொலை செய்யப்பட்ட அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக்கிரியையில் கலந்து கொள்வதற்காக் கொழும்பு வரும் வழியிலேயே நோர்வே அரச பிரதிநிதிகள் லண்டன் சென்று ஆலோசகர் அன்ரன்பாலசிங்கத்தைச் சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இவேவேளை இலங்கை வரும் நோர்வே அரச பிரதிநிதிகள் இரு நாட்கள் இலங்கையில் தங்கியிருந்து சமாதான முயற்சிகளின் நிலைமை குறித்து அரசாங்கத்தலைவர்களுடன் பேச்சுக்களில் ஈடுபடுவர் என நோர்வேவெளிவிவகார அமைச்சு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

(இ-8)

## கதிர்காமர் கொலை விசாரணைகள் தீவிரம்

### தயாரட்னாயக்கா தகவல்

(கொழும்பு)

கொலைசெய்யப்பட்ட அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயாராட்னாயக்கா தெரிவித்துள்ளார்.

கொலையாளிகளை கைதுசெய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. கொலைசெய்யப்பட்ட நாளில் இருந்து நேற்று வரையும் கொலையாளிகளை கைதுசெய்யும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இன்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த சோதனை நடவடிக்கைகளின் போது பொதுமக்களுக்கு எந்தவித இடையூறுகளும் ஏற்படாமல் இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் பொதுமக்கள் அடையாள அட்டைகளை (10 ஆம் பக்கம்பார்க்க)

## கதிர்காமரின் இறுதிக்கிரியை இன்று நடை பெறுகின்றது



கொலை செய்யப்பட்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிக் கிரயைகள் இன்று நடைபெறவுள்ளது. கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் கதிர்காமரின் இறுதிக்கிரியைகள் நடைபெறவுள்ளது.

இன்று நடைபெறவுள்ள லக்ஷ்மன்கதிர்காமரின் இறுதிக்கிரியைகளை முன்னிட்டு அரசு துக்கதினம் அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-8)

## அம்பாறை-காரைதீவில்
## போராளி-ஆதரவாளர்கள் அதிரடிப்படையினரால் கைது!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் காரை தீவுப்பகுதியில் நேற்று விடுதலைப்புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவரும் மூன்று ஆதரவாளர்களும் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அம்பாறைமாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் தயாமோகன் காரைதீவு அரசியல்துறை அலுவலகத்தில் பணிபுரிந்த போராளி ஒருவர் உட்பட மூன்று ஆதரவாளர்களை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

அதேவேளை அதிரடிப்படையினர் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த மக்களையும் விரட்டியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-8)

## புலிகளின் மட்டு.அலுவலகம் மீது நேற்று கிரனைற் வீச்சு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு தாமரைக்கேணியில் உள்ள அரசியல் துறை அலுவலகம் மீது நேற்று நண்பகல் கிரனைற் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அலுவலகத்தை நோக்கி 5கிரனைற்றுக்கள் வீசப்பட்ட போதிலும் அதில் ஒன்றுமட்டுமே வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இக்கைக்குண்டுத்தாக்குதலின் போது அலுவலகத்திற்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாயினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இச்சம்பவத்தையடுத்து போர்நிறுத்த கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளும் பொலிஸ் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச் சென்று பார்வையிட்டுள்ளதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தாக்குதல் சம்பவம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் கருத்துத் தெரிவிக்கையில், அண்மைக்காலமாக கிழக்கு மாகாணத்தில் எமது அலுவலகங்கள் மீது தாக்குதல்கள் இடம்பெற்றவண்ணமுள்ளன. அதன் தொடராகவே தாமரைக்கேணி அலுவலகம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்கு (10 ஆம் பக்கம்பார்க்க)

## அவசரகால நிலை பிரகடனத்தையடுத்து மட்டக்களப்பில் பாதுகாப்புத் தீவிரம்

(மட்டக்களப்பு)

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலை மற்றும் அவசரகால நிலைப்பிரகடனம் ஆகியவற்றையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு நகரம் முழுவதும் அதிகமானபொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளதுடன் திடீர்சோதனை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட் டுள்ளன.

மட்டக்களப்பு கல்முனை நெடுஞ்சாலைப் பகுதிகளில் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் தீவிரபாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதுடன் மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் சோதனை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு விசேட அதிரடிப்படையினர் இப்பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ற-9)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

# கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சனி முதல் விஷேட நடவடிக்கையில் பொலிஸார்!

கொழும்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் நேற்று முதல் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் மேலதிகக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தமது அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள சகல உயர் பொலிஸ் உயரதிகாரிகளுடனும் இதுதொடர்பாக நேற்றுமுன்தினம் இரவு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் மனிதப் படுகொலைகளுடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்வதற்கும் வேலைத் திட்டமொன்றை ஆரம்பிப்பது குறித்து இந்தப் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்டதாக அவர் கூறினார்.

நேற்று முன்தினத்துடன் முடிவடைந்த இரண்டு மாதகாலப் பகுதியில் கொழும்புப் பிரதேசத்தில் 9பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கொலைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் சுதந்திரமாக நடமாடுவதாகவும் அவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மனிதப் படுகொலைகள் இடம்பெற்ற பம்பலப்பிட்டி, கொட்டாஞ்சேனை, தெமட்டகொட ஆகிய பகுதிகள் உட்பட மற்றும் சில பொலிஸ நிலையங்களில் பொறுப்பதிகாரிகளுக்கு விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக பரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜெயசுந்தர குறிப்பிட்டார்.

பம்பலப் பிட்டிப் பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் ஊடகவியலாளரான ரேலங்கி செல்வராஜாவும் அவரது கணவரும் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைது செயயப்படவில்லை.இந்த சந்தேக நபர்களைக் கைது செய்யும் பொருட்டு புலனாய்வுப் பிரிவின் ஒத்துழைப்பைப் பெறப் போவதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ற)

## நெடுந்தீவில் குடும்ப விபரங்களை திரட்டுவதில் இராணுவம் தீவிரம்

நெடுந்தீவுப் பகுதியில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் விபரங்களைத் திரட்டுவதில் இராணவத்தினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் விபரங்களே இவ்வாறு திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1990ஆம் ஆண்டளவில் தீவுப் பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட போது நெடுந்தீவுப் பகுதி மக்களில் கணிசமானோர் யாழ். நகரை அண்டிய பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்திருந்தனர். (து-49)

## படைத்தரப்பு மறுப்பு

கடந்த 2ஆம் திகதி வலம்புரியில் வெளியான "முகமாலையில் படையினர் சோதனை மீன் வியாபாரிகள் வேதனை" என்ற தலைப்பில் வெளியான செய்தியை மறுத்து பலாலி இராணுவமுகாம் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

முகமாலைச் சோதனைச் சாவடி ஊடாக யாழ்ப்பாணச் சந்தைக்கு வாகனங்களிலும் சைக்கிள்களிலும் எடுத்துவரப்படும் மீன்களை குறைந்த நேரத்தில் பரிசோதித்துவிட்டு உடனே அனுப்புவதாகவும் பெரும் மீன்கள் நீண்ட நாட்களுக்கு ஒரு தடவை எடுத்து வருவதாகவும் ஒருநாளும் அம் மீன்களை வெட்டி எடுத்துச் செல்லுமாறு கூறியதில்லையெனவும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (அ)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க நிதிஉதவி

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பகுதியாகப் பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பகுதியாகப் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்கு வங்கிகள் மூலம் 1இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்படவுள்ளது. வங்கி மூலம் இவ் உதவியைப் பெற்றுக்கொள்ள 500 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு பகுதியாகப் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்கு யூ.என்.டி.பி.1இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது.

யூ.என்.டி.பி.மூலம் 1இலட்சத்து 50ஆயிரம்ரூபா நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள 87விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் யூ.என்.டி.பி.150 விண்ணப்பங்களுக்கு இந்நிதியுதவிகளை வழங்க முன்வந்திருப்பதாகவும் விண்ணப்பதாரிகள் ஏதாவதொரு நிதியுதவியைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (அ-52)

## எங்கு வாழ்வதெனத் தீர்மானிக்கும் உரிமை கரையோரச் சுனாமி அகதிகளிடமே இருக்க வேண்டும்

### மஹிந்த சமரசிங்க தலைமையிலான தெரிவுக்குழு சிபார்சு

சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்குப் பின்னர் கரையோரத்திலிருந்து 100மீற்றர் அல்லது 200மீற்றருக்குள் குடியிருக்கும் உரிமை அங்கு வாழ்ந்து வரும் மக்களிடமே வழங்கப்பட வேண்டுமென்று இயற்கை அனர்த்தத்தின் மூலம் ஏற்படும் சேதங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்துவரும் பாராளுமன்றத் தெரிவுக்குழு சிபார்சு செய்துள்ளது.

இந்தத் தெரிவுக்குழுவின் சிபார்சு அடங்கிய அறிக்கை பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியின் பிரதம ஏற்பாட்டாளரான மஹிந்த சமரசிங்க தலைமை வகிக்கும் இத் தெரிவுக்குழு கடந்த பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி முதல் 23 தடவைகள் கூடி ஆராய்ந்து தயாரித்த இவ்வறிக்கையில் 13 யோசனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றினை நியமிப்பதற்கான யோசனையை முன்வைப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த யோசனை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவினால் முன்மொழியப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (து-4)

## இராசி பலன்

**15 .08.2005**
**(ஆடி 30, திங்கட்கிழமை)**
**தசமி நண்பகல் 12.00 மணிவரை**
**கேட்டை பிற்பகல் 3.04 மணிவரை**
**இராகுகாலம் 7.35 - 9.05 மணிவரை**
**சுபநேரம் 12.05 - 1.35 மணிவரை**

- **மேடம்**: புதியதிட்டமிடல், முயற்சி தாமதம், பிதா சிந்தை, பிரயாணம்.
- **இடபம்**: பிரயாணபயம், அபகீர்த்தி, முயற்சி தாமதம், போசனசுகம்.
- **மிதுனம்**: குடும்பசுகம், காரிய அனுகூலம், போசன சுகம், தெய்வசிந்தை.
- **கடகம்**: தொழில் சிந்தை, சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், நண்பர்கள் உதவி.
- **சிங்கம்**: தாழ்ந்த சுபாவம், அதிக பிரயாசை, ஆரோக்கியக்குறைவு, பணக்குறைவு.
- **கன்னி**: மனச்சஞ்சலம், தாய்வழி உறவு, ரோக நிலை, காரியதாமதம்.
- **துலாம்**: கூட்டுமுயற்சி, தனவருவாய், சகோதரர் உதவி, போசனசுகம்.
- **விருச்சிகம்**: கோபப்படுதல், முயற்சி தாமதம், பணக் குறைவு, ரோகநிலை.
- **தனுசு**: நல்லமுயற்சி, புதிய தகவல், உறவினர் சந்திப்பு, போசனசுகம்.
- **மகரம்**: காரிய அலைச்சல், சுபசெலவு, ஆரோக்கியக் குறைவு, வேலையில் ஆர்வம்.
- **கும்பம்**: குடும்பசுகம், முயற்சிகைகூடும், தனதானிய சேர்க்கை, கீர்த்தி.
- **மீனம்**: காரிய சிந்தை, இடமாற்றம், அதிகாரம், பொருள்சேர்க்கை.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

- வளவன்

## வவு.இல் கைதான இளைஞர்கள் விடுதலை

(வவுனியா)

வவுனியா பஸ் நிலையத்தில் உறங்கிக்கொண்டிருந்த போது பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட மட்டக்களப்பைச் சோந்த 13 இளைஞர்களும் வவுனியா மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டு விசாரணைகளின் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வன்னி மற்றும் வவுனியாப் பிரதேசங்களுக்கு அருவி வெட்டச் சென்றதாகவும் களைப்பின் காரணமாகவே தங்குமிடமின்றி வவுனியா பஸ் நிலையப் பகுதியில் உறங்கியதாக அவர்கள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். சந்தேகத்தின் முறையில் தாம் இவர்களைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-8)

## விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச துன்னாலை வசந்தம் முன்பள்ளியின் விளையாட்டுவிழா துன்னாலை தாமரைக்குளம் மைதானத்தில் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கத் தலைவி பண்டிதை திருமதி. பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.சுனாமி செயலகப் பணிப்பாளர் கே.பாலையா முன்பள்ளி மேம்பாட்டு நிறுவனக் கொடியையும்,வடமராட்சி விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சி.பிரியன் தமிழீழ தேசியக் கொடியையும், பண்டிதை பத்தினிப்பிள்ளை முன்பள்ளிக் கொடியையும், வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் ஆகியோர் மங்கள விளக்கையும் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.

பிரதம விருந்தினர் திரு.பாலையா சம்பிரதாய பூர்வமாக விளையாட்டுக்களை ஆரம்பித்துவைத்தார். (ற-52)

## அமைச்சர் கதிர்காமர் நாட்டிற்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியவை

### ஸ்ரீ.சு.கட்சி அறிக்கை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினராகவும், உதவித்தலைவராகவும் பணியாற்றிய முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையின்ன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

கடசியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் நாட்டிற்கு ஆற்றிய அளப்பரிய சேவைகளைப் பணிவுடன் நினைவு கூருகின்றோம். கதிர்காமர் ஜனாதிபதி விடுத்த அழைப்பினை ஏற்று 1994ஆம் ஆண்டில் அரசியலில் இணைந்துகொண்டார்.

தற்போது வசதியான ஒரு வாழ்க்கையினைத் தந்து இவ்வுலகினைவிட்டு சென்றுவிட்டார் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## கொலைஞர்கள் விட்டுச்சென்ற தடயப்பொருட்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் காதிகாமர் கொலை தொடர்பாக தமிழ் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் வசித்து வந்த லக்ஷ்மன் தளையசிங்கம் (வயது 58) மற்றும் அவரது துணைவியார் விபியின் செல்வலோஜினி தளையசிங்கம் ஆகியோர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பின் முன்னணி வர்த்தக நிறுவனம் ஒன்றில் நிர்வாக மேலாளராகப் பணிபுரியும் தளையசிங்கத்தின் வீடு கதிர்காமர் வீட்டிலிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவிலே அமைந்துள்ளது. அவரது வீட்டின் மாடியிலிருந்து தான் கதிர்காமர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்களது வீட்டின் மாடிப் பகுதியை பெரும்பகுதி நேரம் பூட்டியே வைத்திருப்பதால் இந்தத் தாக்குதல் குறித்து தங்களுக்கு எதுவுமே தெரியாது என்று வீட்டின் உரிமையாளர்கள் இருவரும் விளக்கம் அளித்துள்ளனர்.

எந்த நேரமும் பலத்த பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்ட பிரதேசத்தில் இந்த வீடு அமைந்துள்ளது என்பதும் குறிப்பாக சுவீடன் தூதரகத்திற்கு மிக அருகே இந்த வீடு அமைந்துள்ளது என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

மேற்படி இல்லத்தின் மாடியில் அமைந்துள்ள குளியலறை யன்னல்கள் உடைக்கப்பட்டு அதன் வழியே கதிர்காமர் மீது குறி பார்த்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அத்துடன், அவரைக் குறி பார்த்துச் சுடுவதற்காக 7 அடி உயரமான ஏணியொன்று குளியலறையினுள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அந்தக் குளியலறையிலிருந்து இருவேறுபட்ட கைரேகை அடையாளங்களைப் பதிவுசெய்துள்ளதுடன் மேல்மாடியிலிருந்து ஒரு சோடி பாதணிகள், வெற்றுத்தண்ணீர் மற்றும் சோடாப் போத்தல்கள் போன்றனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இரவுப் பார்வைத் தூரநோக்கி பொருத்தப்பட்ட 8.3 மில்லி மீற்றர் வகை துப்பாக்கியே தாக்குதலிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் நான்கு சூடுகள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதற்கான நான்கு வெற்றுச் சன்னக் கூடுகளைத் தாங்கள் அங்கிருந்து கைப்பற்றியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சம்பவ இடத்திலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள புதரொன்றில் இருந்து ஒரு கிரனைட் லோஞ்சர் அதற்கான 8 கிரனைட் புலட்ஸ் அடங்கியமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ற-4)

## பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு பொருளாதார வளர்ச்சியே

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமாயின் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதத்தினை அண்மிக்க வேண்டுமென நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித் துள்ளார்.

தற்போது நிலவும் பொருளாதார வளர்ச்சியின் மூலம் இலங்கையில் வறுமைக்கான தீர்வுகளினைப் பெற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (து-4)

## திருநாள் திருப்பலி

சில்லாலை "புனித கதிரை மாதா" ஆலயத்தின் திருநாள் திருப்பலி இன்று காலை 7.30 மணிக்கு வணக்கத்திற்குரிய யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (து-58)

# தெய்வீக இசையரங்கில் இன்று...

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவ காலததை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம தெல்லிப் பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதர வுடன் நல்லூர் துர்க்காதேவி மணி மண்ட பத்தில் நடாத்தி வரும் தெய்வீக இசையரங கின் ஆறாம் நாள் நிகழ்வுகள் இன்று நடை பெறவுள்ளன.

இன்றைய நிகழ்வில் பாட்டு யசோதா ஸ்ரீ குமரன், சந்திரிகா கணேஸ்வரன், வயலின் றோகிணி அருளையா, மிருதங்கம் என். மாதவன் ஆகியோரின இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (ற-19)

# வீட்டுத் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது



(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் -கியூடெக் நிறுவனத்தினால் தும்பளை வடக்கு, முனை சின்னத்தோட்டம் ஆகிய இடங்களில் சுனாமியால் பாதிக்கபபட்ட மக்களுக்கு 160 நிரந்தர வடுகள அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக 8 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த மாதம் 27ஆம் திகதி தும்பளை வடக்கில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் சுனாமி செயலணிக் குழு நிர்வாக அதிகாரி, அருட்தந்தை இருதயதாஸ், கரித்தாஸ் - கியூடெக் திட்டமிடல் முகாமை யாளர், உதவித்திட்டமிடல் முகாமையாளர், பொறியியலாளர், கள உத்தியோ கத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, சுனாமியால் பாதிக்கபபட்ட பாடசாலை மாண வர்களுக்கு கியூடெக் -கரித்தாஸ் நிறுவனத்தினால் பாடசாலை தள பட உபகரணங்களும் அன் பளிப் பாக வழங்கபபட்டுள்ளன.

அத்துடன் சென்ஜேம்ஸ் ஆண் கள் பாடசாலையில் கல்வியிலும் நூறு மாணவர்களுக்கென மேசை கள், கதிரைகள் என்பனவும் வழங் கப்பட்டுள்ளன. (ற-19)

## மகோற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு சக்கராழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

27ஆம் திகதி உறியடி உற்சவமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-79)

# பாகிஸ்தான் தூதுவர் அம்பாறைக்கு விஜயம்

(அம்பாறை)

பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் அம்பாறை மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார்.

அவர் தனது விஜயத்தின்போது ஒலுவிலி லுள்ள தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக கும் சென்றார். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட உயர்ஸ்தானிகர் தலைமை யிலான குழுவினரை பல்கலைக்கழக துணை வேந்தர், ஆசிரியர்கள், மாணவர்கள் வரவேற்றனர்.

பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலும் அவர் கலந்து கொண்டார். தென்கிழக்கு பல்கலைக்கழக கற்கைநெறிகளை முன்னேற்றுவது தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து இச்சந்தப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (ற-8)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பெண்கள் வலுவூட்டல் சமூக நலன்புரி அமைச்சின் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் பதவிக்கு விண்ணப் பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருப்பதோடு 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் யாவும் இம்மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு 'முதியோர்களுக்கான தேசிய செயலகம், இல.150ஏ, எல்எச்பி கட்டிடம் நாவலறோட், நுகேகொட' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அத்துடன் கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் 'முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்' எனக் குறிப்பிடல் வேண்டும். (ற-19)




வடமராட்சி லயன்ஸ்கழக இவ்வருடத்திற்கான செயற்குழு உறுப்பினர்கள் பதவி ஏற்புவைபவத்தைப் பிரதமவிருந்தினர் லயன்.எஸ்.ஞானராஜா மங்கள விளக்கேற்றி ஆரம்பிப்பதையும், புதிய தலைவர் வி.சிவகுமாருக்கு முன்னாள் தலைவர் வி.தர்மலிங்கம் பொறுப்புக்களை ஒப்படைப்பதையும், லயன்சீமாட்டி திருமதி. வசந்தி ஞானராஜா, புதிய தலைவரின் பாரியார் திருமதி றஞ்சிதமலர் சிவகுமாருக்கு அன்பளிப்பு வழங்குவதையும் காணலாம்.

(படங்கள்: பரு.நிருபர்)

# இலங்கை வரவுள்ள பங்களாதேஷ் அணி

இலங்கைத் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப ஆட்டக் காரர் நபீஸ் இக்பால் நீக்கப்பட்டுள்ளார்.

இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும பங்களாதேஷ் அணி 3 ஒரு நாள் போட்டி, 2 டெஸ்ட் அடங்கிய தொடரில் பங்கேற்கிறது. ஒருநாள் தொடர் வரும் ஆகஸ்ட் 31இல் துவங குகிறது. டெஸ்ட் போட்டிகள் செப்டெம்பரில் நடக்கவுள்ளன.

சமீபத்தில் நடந்த நாற்வெஸ்ட் ஒருநாள் தொடரில் பங்களாதேஷ் அணி உலக சம் பியனான ஆவுஸ்திரேலியாவை வீழத்தி வர லாறு படைத்தது. இந்த மகத்தான வெற்றி பெற்ற அணியில் இக்பாலும் இடம்பெற்று இருந்தார்.

இலங்கைகது எதிரான ஒருநாள் தொடாில் இருந்து நீக்கப்பட்டிருந்தாலும் இவருக்கு டெஸ்ட் வாய்ப்பு தரப்படும் என பங்களாதேஷ் கிரிக் கெட் சபை உறுதியளித்துள்ளது.

வேகப்பந்து வீச்சாளர் தபாஷ் பைஸ்யா காயம் காரணமாக இடம்பெறவில்லை. இவ ரும் டெஸ்போட்டிக்கு திரும்புவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

சுழல்பந்து வீச்சாளர் அப்துல் ரசாக், மித வேகப்பந்து வீச்சாளர் சயத் ரசலுக்கு வாய்ப்பு கொடுக்கபபட்டுள்ளது. இதுவரை 38 டெஸ்டில் விளையாடியுள்ள பங்களாதேஷ் அணி 33 முறை தோல்வியை சந்தித்துள் ளது. 115 ஒரு நாள் போட்டிகளில் விளை யாடி 10 முறை மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.

இந்தத் தோல்விவரலாற்றை மாற்றிக் காட்ட அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பெற்ற வெற்றி கைகொடுக்கும் என பங்களாதேஷ் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஒருநாள் தொடருக்கான பங்களாதேஷ் அணிவபரம் அறிவிகக்ப பட்டுள்ளது. இதன்படி ஹபிபுல் பஷார் அணித் தலைவர், காலித் மசூத், முகமது அஷ்ரபுல், ஜேவட் ஓமர், ராஜின் சலே, துஷார் இம்ரான், அப்தாப் அகமது, ஷாரியார் நபீஸ் அகமது, முகமது ரபீக், காலித் மகமூத், மன்சூரல் இஸ் லாம், நஸ்மல் ஹுசைன், அப்தூர் ரசாக், மஷ்ராபே மொர்டாசா, சயத்ரசல் ஆகிய 15 வீரர்களும் பயிற் சியாளர் டேவ் வட்மோரும் இலங்கை வரவுள ளார்கள். (து-19)

## விளையாட்டுச் செய்திகள்

# முத்தரப்புப் போட்டி பற்றி முரளீதரன் விமர்சனம்



முத்தரப்பு ஒருநாள் தொடரில் கோப்பை வென்றது மகிழ்ச்சியான அனுபவமாக அமைந தது. இறுதிப்போட்டியில் எங்கள் வீரர்கள் அனைத்து துறைகளிலும் சிறப்பான ஆட்டதை வெளிப்படுத்தினர். இதில் துடுப்பாட்ட வீரர் களின் பங்கு அதிகம். 281 ஓட்டங்கள் என்ற வலுவான நிலையை இவர்கள் எட்டியதால் தான் நம்பிக்கையுடன் பந்து வீச முடிந்தது என முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், ஜெயவர்த் தன, ஆருணால்ட் ஆட்டம் அபாரமாக இருந்தது. கடினமான இலக்கை அடைய இருந்த இந் திய அணிக்கு சேவாக் நல்ல துவக்கம் அளித் தார். சிக்சர் பவுண்ரி என விளாசிய இவரது ஆட்டத்தைப் பார்த்து துவக்கத்தில் பயந்து போனோம். நல்லவேளை சீக் கிரமே இவரது விக்கெட்டை வாஸ கைப்பற்றி விட்டார். யுவராஜ்சிங் -டிராவிட் கூட்டணி சிறப்பாக ஆடி யது. ஆட்டத்தின் முக்கியமான கடைசி கட்டத்தில் பந்துவீசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதில் சரியான முறையில் பந்துவீசி அணிக்கு வெற்றி தேடித் தந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வெற்றியானது வலுவான அணியாக இலங்கை வளர்ச்சி பெற்று வருவதைக் காட்டு கிறது. புதிய பயிற்சியாளர் டாம் மூடி வெற்றி யுடன தனது பணியை துவக்கியுள்ளார். இவரது பயிற்சியில் எங்கள் அணி பல சாதனைகள் படைக்கும் என நம்புகிறேன். இவ்வாறு முரளிதரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (து-19)

# காலிறுதியில் ஆகாசி வெற்றி

(யாழ்ப்பாணம்)

டெனிஸ் தரப்படுத்தலில் நான்காவதாக வுள்ள அமெரிக்காவின் அன்ரு ஆகாசி கனடாவில் நடைபெறும் மாஷ்ரர் சம்பியன் போட்டியில் ஆண்கள் பிரிவில் கால் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.

கால் இறுதிப் போட்டியில் ஆகாசி ஆறாம் நிலையில் உள்ள ஆஜன்ரீனாவின் கெஸ்ரன் கோடியோவை 6:3, 6:4 என்ற றேர்செற் கணக்கில் தோற்கடித்து அரை இறுதிக்கு தகுதிபெற்றுள்ளார். (ற-19)

# ஆசிய லெவன் அணி வலுவாக உள்ளது

## கப்டன் இன்சமாம் கருத்து

ஆசிய லெவன் அணி ஆபிரிக்கா லெவன் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டி தென் ஆபிரிக்காவில் நடக்கவிருக் கிறது. மொத்தம் 3 போட்டிகள் கொண்ட தொட ரின் முதல் போட்டி வருகிற 17ஆம் திகதி பிரிட்டோரியாவிலும், 2வது போட்டி 20ஆம் திகதி டெபன் நகரிலும், 3வது போட்டி 21ஆம திகதி அதே இடத்திலும் நடக்கவிருக்கிறது.

இதில் ஆசிய லெவன் அணிக்கு பாகிஸ் தான் கப்டன் இன்சமாம் அணித்தலைவராக இருக்கிறார். இந்த அணியில் இடம்பெற்று இருந்த இந்திய வீரர் டிராவிட், இலங்கை வீரர் ஜெயசூரியா ஆகியோர் விளையாடவில்லை. இவர்களுக்குப் பதிலாக இலங்கை அணித்தலை வர் அத்தப்பத்து, இலங்கை வீரர் ஜெய வர்த்தன, பங்களாதேஷ் வீரர் காலித் மசூத் ஆகியோர் இடம்பெற்று உள்ளனர்.

அதேபோல அணியில் இடம்பெற்று இருந்த இர்பான் பதான், சமிந்த வாஸ் ஆகியோர் காயம காரணமாக விலகி விட்டனர். அவர்களுக்கு பதிலாக ஆசிஷ் நெக்ரா, ஜகீர்கான் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

போட்டியில் பங்கேற்பதற்காக கப்டன் இன்சமாம கராச்சியில் இருந்து தென் ஆபிரிக்காவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளார். அப்போது அவா பின்வருமாறு தெரிவித்தார்.

ஜெசூரியா, டிராவிட் போன்ற முன்னணி வரர்கள் ஆசிய லெவன் அணியில் இடம்பெறா விட்டாலும் எங்கள் அணி வலுவாகவே உள் ளது. எங்களால் வெற்றி பெற முடியும்.

சில முன்னணி வீரர்கள் விளையாட்டில் பங்கேற்க முடியாத சூழ்நிலை இருப்பதால் இதை சிறந்த அணி என்று கூற முடியாவிட் டாலும் ஆபிரிக்கா லெவன் அணியை வெற்றி கொள்ளும் அளவுக்கு வீரர்கள் இருக்கிறார் கள் இருந்தாலும் போராடித்தான் வெற்றி பெற முடியும் எனத் தெரிவித்தார். (ற-19)

# உந்துருளி ஓட்டப் போட்டி

நுவரெலியா மாநகரசபை முதல்வர் சந்தன லால கருணாரதனவின் ஏற்பாட்டில இன்று உந்துருளி மற்றும் சிற்றூர்தி ஓட்டப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கான விரிவான ஏற்பாட்டை மாநகரசபை உறுப்பினரும் நுவரெலிய மோட்டார் சங்க உறுப்பினருமான கே.சந்திரசேகர் மேற்கொண்டு வருகிறார்.

ஐம்பது சி.சி.வலுகொண்ட உந்துருளிகள முதல் ஆயிரம் சி.சி. வலு கொண்ட உந்துருளிகள் வரை இப்போட்டிகளில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-19)

# எஸ்லோ ஆசிய கிண்ண போட்டிக்கு சர்வதேச அந்தஸ்து

இம்மாதம் 17ஆம் திகதி, செஞ்சூரியனிலும் 20, 21ஆம் திகதிகளில் டெபனிலும் நடைபெறவிருக்கின்ற எஸ்லோ ஆசிய கிண்ண ஒருநாள் போட்டிகளுக்கு சர்வதேச அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய கூட்டு அணிகளுக்கிடையிலான இந்த வருடப் போட்டிகளுக்கு சர்வதேச கிரிக்கெற் பேரவை உத்தியோகபூர்வ சர்வதேச அந்தஸ்து வழங்கியுள்ளமை மூன்றாவது தடவை ஆகும்.

இந்த வருடம் ஜனவரி மாதம் மெல்போனில் நடைபெற்ற உலகத்தெரிவு அணிக்கும் ஆசியத தெரிவு அணிக்கும் இடையிலான சுனாமி நிதிதிரட்டும் போட்டிக்கு சர்வதேச அந்தஸ்தை சர்வதேச கிரிக்கெட் பேரவை வழங்கியிருந்தது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவிருக்கும் உலக சம்பியன் அவுஸ்திரேலியாவிற்கும் உலகத்தெரிவு அணிக்கும் இடையிலாக சுப்ப சீரிஸ் தொடருக் கும் சர்வதேச கிரிக்கெட் பேரவையால் சர்வதேச அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. (ற-19)

# இன்று ஒரு தகவல்

## இருட்டில் ஒரு சோதனை

இருட்டில் இருந்து வெளிச்சத்திற்குவா என்று ஞானிகள் சொல்வார்கள். வெளிச்சத்திலிருந்து இருட்டுக்குப்போ என்று சில விஞ்ஞானிகள் சொல்வார்கள். நம்மில் பலபேர் கடனை வாங்கிவிட்டுக் கண்ணில் படாமல் போய்விடுவது வழக்கம். அவர்களுக்கெல்லாம் தலைமறைவு ஆவது எப்படி என்று சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. அது அவர்களுக்கு கைவந்த கலையாக இருக்கும். அந்தக் கலையைக் கற்றுக்கொண்ட பின்புதான் கடன் வாங்கவே ஆரம்பிக்கின்றார்கள். வெளிச்சத்தையே பார்க்காமல் வீட்டுக்குள் பதுங்கியிருக்கவும் அவர்கள் தயாராக இருப்பார்கள்.

ஒருவர் சூரிய ஒளியையோ நிலவு வெளிச்சத்தையோ பார்க்காமல் பல நாட்களுக்குத் தலைமறைவாக இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அப்படி அவர் இருந்தால் என்னவாகும்? இருந்து பார்த்தால் தான் கூறமுடியும். சிலபேர் அப்படி இருந்து பார்த்திருக்கின்றனர் யார் தெரியுமா? சோவியத் விஞ்ஞானிகள்.

இது எதற்கு வேண்டாத வேலை என்று தோன்றுகின்றதா உங்களுக்கு? ஆனால் அவர்களுக்கு அப்படித் தோன்றவில்லை. அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? ஒரு குகைக்குள் போய் உட்கார்ந்துவிட்டார்கள். குகை என்றால் சாதாரண குகை இல்லை. ஆழமான குகை. எவ்வளவு ஆழம் தெரியுமா? 13.3 கிலோமீற்றர் அதாவது சுமார் 8 மைலுக்கும் அதிகமான ஆழமுள்ள குகை. உலகத்திலேயே இது மூன்றாவது ஆழமான குகை.

இந்தக் குகைக்கு உள்ளே போனால் அவ்வளவுதான். அங்கே ஒரே இருட்டு. சூரிய வெளிச்சமும் இல்லை. நிலவு வெளிச்சமும் இல்லை. அவ்வளவு ஆழமான இருட்டுக் குகைக்குள் போய் இந்த விஞ்ஞானிகள் உட்கார்ந்து கொண்டனர். சாப்பாட்டுக்கு என்ன செய்தார்கள்? அதைப் பற்றி ஒன்றும் கவலை இல்லை. சாப்பாடு அவ்வப்போது மேலேயிருந்து போய்க் கொண்டிருந்தது.

குகைக்குள்ளேயே தங்கியிருப்பதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டனர். அவர்கள் அப்படி எத்தனை நாட்கள் அந்தக் குகைக்குள் இருந்தார்கள் தெரியுமா? ஒருநாள், இரண்டு நாள் இல்லை. 71 நாட்கள் இருட்டிலேயே இருந்தார்கள். அதாவது கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ மாதங்கள்.

இவ்வளவு நாளும் சூரிய வெளிச்சத்தையோ நிலவின் வெளிச்சத்தையோ பார்க்காமல் இருந்தால் என்ன ஆகும்? அதைத் தெரிந்து கொள்வதற்குத் தானே இந்த ஆராய்ச்சியே நடந்தது. அப்படி என்ன தெரிந்து கொண்டனர் தெரியுமா? அந்தக் குகைக்குள்ளே போய் இருந்த விஞ்ஞானிகளை மெதுவாக வெளியே கொண்டுவந்து உட்கார வைத்துக் கொண்டனர்.

இருட்டிலேயே இருந்தவர்கள் தமது அனுபவத்தைக் கூற ஆரம்பித்தனர். அங்கே போய் பேயைப் பார்த்தேன், பிசாசைப் பார்த்தேன் என்றா சென்னார்கள்? விஞ்ஞானிகள் அப்படிச் சொல்வார்களா? இல்லை. அவர்களுக்கு இரவு, பகல் என்ற உணர்வே அற்றுப்போய்விட்டதாம். அந்த வித்தியாசமே இல்லாமல் போய்விட்டது.

அதனால் அவர்களால் ஓய்வு எதுவுமின்றி 48 மணித்தியாலயங்களுக்குத் தொடர்ந்து வேலை செய்ய முடிந்ததாம். அதே சமயத்தில் தொடர்ச்சியாக 15 மணித்தியாலங்களுக்குத் தூங்கவும் முடியுமாம். 24 மணித்தியாலம் கொண்டது ஒருநாள் என்பதே அர்த்தமில்லாமல் போய் விட்டது என்று சொல்கின்றனர்.

அதனால் சில அலுவலகங்களை குகைக்குள் கொண்டுபோய் கட்டிவிட்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் அங்கு ஓய்வின்றி 48 மணிநேரம் தொடர்ந்து வேலை செய்யமுடியுமாமே. உடலைப் பொறுத்தவரை வெளிச்சத்திலிருந்து இருட்டுக்குப் போவதும் நல்லது என்று தெரிகிறது. ஆனால் அறிவைப் பொறுத்தவரை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்கு வரவேண்டும் அதுதான் நல்லது.

ஒரு மகான் சொல்கிறார் "உங்களுக்குப் பின்னால் நீங்கள் வாழ்ந்து மறைந்ததற்கு அறிகுறியாக எதையாவது விட்டுச் செல்லுங்கள். அப்படி இல்லாவிட்டால் மரம், கல் முதலியவற்றிற்கும் உங்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?" என்று கேட்கிறார் அவர்.

நாம் இங்கே இருந்ததற்கு அடையாளமாக எதையாவது விட்டுவிட்டுச் செல்லவேண்டும். அதுதான் நல்லது. இப்போது அதுபோல விட்டுவிட்டுச் செல்பவர்கள் நிறையப்பேர் உள்ளனர். எங்கே தெரியுமா? கடற்கரைக்குப் போனால் சுண்டல் வாங்கித்தின்று விட்டு வெறும் பைகளை விட்டு விட்டுச் செல்பவர்கள் எத்தனைபேர்? இருந்ததற்கு அடையாளமாக எதையாவது விட்டுச் செல்லுங்கள் என்று சொன்னால் இப்படியா செய்வது?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அவசரகாலச் சட்டம் பிரகடனம்; ஒரு பொறுப்பற்ற நடவடிக்கை

## ஆசிய மனித உரிமைகள் அமைப்பு கடும் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் அவசரகாலச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளமைக்கு புதுடில்லியை தலைமையிடமாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் இயக்குநர் சுகாஸ் சக்மா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்ட நிகழ்வு ஒரு கொடும் நிகழ்வுதான். ஆனால் விசாரணை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியிருப்பதும் மற்றொரு கொடும் நிகழ்வேயாகும்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. கொலையாளிகளைப் பிடிப்பதற்காக ஊரடங்கு கொழும்பை மூடிவிட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளுதல் போன்ற சட்டபூர்வமான நடவடிக்கைககளை வேண்டுமானால் அரசாங்கம் மேற்கொள்ளலாம்.

இந்த அவசரகாலச் சட்டப் பிரகடனம் மக்களிடையே விரோத மனப்பான்மையை ஏறபடுத்தக்கூடும். இப் பிரகடனம் இலங்கை அரசும் பங்கேற்றுள்ள மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்பின் விதிகளுக்கு எதிரானது என சுகாஸ் சக்மா மேலும் அவ் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ற-4)

# தற்காலிக, அமைய, பதிலீட்டு, ஒப்பந்த அடிப்படை ஊழியர்களை நிரந்தரமாக்க அரசு நடவடிக்கை

(பருத்தித்துறை)

அரச நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளின் தற்காலிக, அமைய, பதிலீட்டு, சலுகை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்த ஊழியர்களை நிரந்தரமாக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கையை அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் டி. திசாநாயக்க இலங்கை திறைசேரியின் இணக்கத்துடன் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள், அரச கூட்டுத் தலைமைச் செயலாளர்கள், தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் தந்காலிக, அமைய, பதிலீட்டு, சலுகை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்த சகல ஊழியர்களையும் குறிப்பிடப்படும் தேவைகளைப் பூர்த்தி செய்திருப்பின் 01.07.2005ஆம் திகதி முதல் சேவையில் நிரந்தரப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியில் வெற்றிடங்கள் இருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரிய தற்போது வெற்றிடமாகியுள்ள நிரந்தர பதவியில் 30.06.2005ஆம் திகதிக்கு (வேலை செய்யும் நாட்கள்) 180 நாட்களைத் திருப்திகரமாகவும், தொடர்ந்தும் சேவையாற்றியிருத்தல் வேண்டும். அரசாங்க விடுமுறை மற்றும் பொதுவிடுமுறை தினங்களில் சேவையாற்ற வேண்டிய பதவியொன்றில் பணியாற்றும் அலுவலரொருவரின் சேவையாற்றிய 180 நாட்களை கணக்கிடும் போது அத் திகதிகளையும் ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டும்.

பதவிக்கு ஏற்புடைய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் காட்டப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். 01.10.2002 மற்றும் 24.10.2002 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 16 மற்றும் 16 (1) வெளியிடப்பட்டதன் பின்பு மேற்படி அடிப்படையில் செய்யப்பட்ட நியமனமானால் அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

30.06.2005இல் 45வயதைக் கடந்திருப்பினும் அவர்களைத் தற்காலிக, பதிலீட்டு, சலுகை ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் சந்தர்ப்பத்தில் 45 வயதைக் கடந்திருக்காவிட்டால் அவர்களைச் சேவையில் நிரந்தரப்படுத்த முடியும்.

மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் சகல அலுவலர்களையும் நிரந்தர சேவைக்கு நியமனம் செய்வதற்கு உரிய நியமன அதிகாரி தவறாது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-52)

# இனபந்தங்களுக்கு அடிபணியாமல் திறந்த மனதுடன் செயலாற்றியவர்

## கதிர்காமரின் மறைவுக்கு ஜே.வி.பி. இரங்கல்

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட அமைச்சர் கதிர்காமர் வெளிநாட்டு அமைச்சராகவும், ஒரு தேசத் தலைவராகவும் நாட்டுக்கு அரும்பாணியாற்றியுள்ளார் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

கதிர்காமரின் கொலையினைக் கண்டித்து நேற்று முன்தினம் ஜே.வி.பி.வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறுகிய இனபந்தங்களுக்கு அடிபணியாமல் திறந்த மனதுடன் எப்பொழுதும் பிரச்சினைகளை அவர் அணுகினார்.

கடந்த வருடம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தினை உருவாக்கியதில் கதிர்காமர் முக்கிய பங்கினை வகித்தார். இலங்கையின் இறைமையினையும் பிரதேச ஒருமைப்பாட்டினையும் பாதுகாத்து நாட்டின் நிரந்தரமானதும், கௌரவமானதுமான சமாதானத்தினைக் கொண்டு வருவதற்கு காலஞ்சென்ற அமைச்சர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

விடுதலைப் புலிகள் உண்மையான சுயரூபத்தினை உலகிற்கு வெளிக்கொணர்வதில் கதிர்காமர் ஆற்றிய பங்கிற்காக விடுதலைப் புலிகளின் கொலை அச்சுறுத்தல் அவருக்கு நீண்டகாலமாக இருந்து வந்தது.

உலக அங்கீகாரம் பெற்ற ஒரு வெளிநாட்டு அமைச்சரைப் படுகொலை செய்வது விடுதலைப் புலிகளுக்கு தடை எதுவும் ஏற்படவில்லை என்பதை யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுல்செய்யப்பட்ட விதம் எடுத்துக் காட்டிவிட்டது என ஜே.வி.பி. வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-4)

# புதுப்பொலிவு பெற்றுவரும் பொம்மைவெளிக் கிராமம்

(பொன்னாலை)

யாழ். பொம்மைவெளிக் கிராமம் நிக்கொட் திட்டத்தின கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இராணுவ் நடவடிக்கைகள் காரணமாக முற்றாகச் சிதைந்து போயிருந்த இக்கிராமம் தற்போது புதுப் பொலிவு பெற்று வருகின்றது.

வீதி புனரமைப்பு, மின்சார விநியோகம், குடிநீர் வசதி, பொது மண்டபங்கள் புனரமைப்பு, வருமான அதிகரிப்புக்கான கடன் வழங்குதல், இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி வழங்குதல், விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல், சமூக தயாராக்கல் திட்டங்களை வகுத்தல், வியாபார நடவடிக்கைக்கான உதவி வழங்குதல், சூழல் பாதுகாப்பு, மரநடுகைத் திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு கட்டங்களிலும் அபிவிருததிப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ற-49)

# க.பொ.த. (உ/த) செயன்முறைப் பரீட்சை இன்றுமுதல் 23ஆம் திகதிவரை நடைபெறும்

க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் செயன்முறைப் பரீட்சைகளை இன்று தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதிவரை நடாத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சிங்கள நடனம், சங்கீதம், கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம், மேல்நாட்டுச் சங்கீதம், மனையியல், பொருளியல், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளே இன்று நடைபெறவுள்ளன.

இவற்றுக்கான அனுமதிப் பத்திரங்கள் பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தற்போது விடுமுறை வழங்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் உடனடியாக இவ் அனுமதிப் பத்திரங்களை உரிய விண்ணப்பதாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு பரீட்சைகள திணைக்களம் ஏற்கனவே பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற-7)

# யோகாசனம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில எதிர்வரும் 20,21, 27, 28 ஆம் திகதிகளில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரனின் தலைமையில் வாழும் கலைப் பயிற்சி நிறுவனத்தினர் வழங்கும் யோகாசனம், தியானம், மூச்சுப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

**என்.விஜயன்**

## ஜே.ஜே.நகரில் மற்றாஸ் மெடிக்கல் மிசன்

**50** பெஷன் நகரில் குடிசைகள் நிறைந்த பாதையினூடாக அன்னை வேளாங்கன்னி மாதா கோவிலை அடைந்தோம்.

அழகுமிகு தோற்றம்.தேவாலயம் மிகப் பிரமாண்டமானதாக இல்லையாயினும், யேசுபாலனை ஏந்திய வேளாங்கன்னி மாதாவின் தெய்வீகம் எம்மை ஈர்த்தது. ஒரு அடி நீளமான மெழுகுதிரியை ஏற்றியபடி சென்று, அதற்குரிய இடத்தில் வைத்து விட்டு, மாதாவின் திருப்பாதங்களைத் தொட்டு வணங்கினேன். நான் ஒரு கிறிஸ்தவ மதத்தைச் சாராதவனாயினும், கிறிஸ்தவ ஆலயங்களில் நடைபெறும் ஆராதனைகளை ஓரளவேனும் அறிந்து வைத்துள்ளேன் எனக் கூறிக்கொள்வதில் பெருமையடைகின்றேன்.

எனது சிறுவயதில் எங்கள் ஊரில் உள்ள சம்பேதுருவானவர் ஆலயத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் ஆராதனைகளைப் பார்த்திருக்கின்றேன்.

1972 ஆம் ஆண்டு மடுமாதாவின் திருச்சொருபத்தை எங்கள் ஊருக்குக் கொண்டு வந்திருந்தார்கள். அப்போது நான் சிறுவனாக இருந்தேன். சம்பேதுருவானவர் ஆலயத்தில், மடுமாதாவின் திருச்சொருபம் வைக்கப்பட்டிருந்தது. அன்று மடுமாதாவை வழிபட்ட எனக்கு பெஷன் நகரில் அன்னை வேளாங்கன்னி மாதாவை வணங்கியபோது, அந்த ஞாபகங்களே நினைவுக்கு வந்தன.

சைவம், கிறிஸ்தவம் என்ற பேதமை இன்றி வழிபாடு செய்யும் வழக்கம் எங்கள் ஊருக்குரிய பெருமைகளில் ஒன்று.

கண்ணகை அம்மனின் ஊர்வலத்தில் கிறிஸ்தவர்கள் அர்ச்சனை செய்யும் பாங்கும், சம்பேதுருவானவரின் திருச்சொருப பவனியின் போது சைவசமயத்தவர்கள் பிரார்த்தனை செய்யும் அழகும் அற்புதமானவை. அந்த சமய சமரசத்தின் உயர்வை நினைத்தபோது ஆனந்தத்தின் மிகுதியாக என் கண்கள் கலங்கின.

எல்லோரும் வேளாங்கன்னி மாதாவை வணங்கிவிட்டு அங்கிருந்து நுங்கம்பாக்கத்தை அடைவதற்காக பஸ் ஏறினோம்.

**ஜே.ஜே.நகரில் மற்றாஸ் மெடிக்கல் மிசன்**

பெஷன் நகரில் அஷ்டலக்ஷ்மி கோவில், அறுபடை முருகன் வீடு, வேளாங்கன்னி மாதா கோவில் வழிபாடுகளுடன் அன்றைய தினம் பயணுடைய வகையில் செலவழிக்கப்பட்டது.

மறுநாள் தினமணி பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றேன். வழமையான கடமைகளை முடித்த போது, செய்தியாளர்களுக்குப் பொறுப்பாக இருக்கின்ற திரு. ரங்கராஜன் என்னை அழைத்தார். அன்றையதினம் மாலை 6 மணியளவில் மற்றாஸ் மெடிக்கல் மிசனில் (Madras medical mission) நிகழ்வொன்று நடைபெற இருப்பதாகவும், அதில் கலந்துகொள்ளுமாறும் கூறினார்.

வழமையில் இத்தகைய நிகழ்வுகளுக்குச் செல்வதாக இருந்தால் தினமணியின் அலுவலகச் செய்தியாளர்களுடன் செல்வதே வழக்கம்.

அந்த வழக்கத்தில் யாருடன் செல்வது என திரு.ரங்கராஜனிடம் கேட்டேன். எனது கேள்விக்கு அவரிடம் இருந்து கிடைத்த பதில் நீங்கள் தனியாகப் போங்கள் என்பதாக இருந்தது.



மற்றாஸ் மெடிக்கல் மிசன் முகப்புத் தோற்றம்

மற்றாஸ் மெடிக்கல் மிசனுக்குத் தனிமையில் சென்று செய்தி சேகரிப்பது என நினைத்தபோதே என்னை அறியாமல் எனக்குள் ஒருவித பயம்.

மற்றாஸ் மெடிக்கல் மிசன் எங்கே இருக்கிறது. எனது அடுத்த கேள்வி திரு.ரங்கராஜனின் பதிலுக்காக முன்வைக்கப்பட்டது.

கதையிலும், செயலிலும், ஏன்? சிரிப்பதிலும் கூட அவசரமாகச் செயற்படும் ரங்கராஜன் சார்... மற்றாஸ் மெடிக்கல் மிசன் ஜே.ஜே.நகரில் தானே இருக்கிறது என்றார். அவரின் பதில் என்னை ஒரு தமிழ் நாட்டவராகப் பாவனை செய்தாலன்றி வேறு, எந்தவகையிலும் அது எனக்குத் தெளிவானதல்ல.

சரி பார்ப்போம். வாய் இருந்தால் வங்காளம் போகலாம் என்ற பழமொழியின் சொந்தக்காரராகிய நாம் அதிகம் யோசிக்கலாகாது என எண்ணிக்கொண்டு ஆசிரிய பீடத்திற்குச் சென்றேன்.

ஆசிரியர் திரு. சந்திரசேகரன் அவசரமாக எழுதிக்கொண்டிருந்தார். எக்ஸ்கியூஸ்மி சொல்லியபடி சார், மற்றாஸ் மெடிக்கல் மிசனில் இன்றைக்கு ஒரு புறோக்கிறாம். அங்கு செல்லுமாறு... ரங்கராஜன் சார் சொல்லியிருக்கிறார்... என் நகர்வுக்கான அனுமதியைப் பெறுவதற்காகக் கூறினேன். போய்ற்று வாங்க... ஆசிரியரின் அனுமதி கிடைத்தது. உடனேயே லொயலா கொலிஜ் கொஸ்ரலுக்குச் சென்றேன். லொயலா கொலிச் கொஸ்ரலில் தம்பி இராஜேஸ்வரன் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். ஜே.ஜே.நகரிலுள்ள மற்றாஸ் மெடிக்கல் மிசனுக்குச் செல்லவிருக்கும் தகவலை அவரிடம் தெரிவித்தேன்.

தானும் வருவதாகக் கூறினார். வனவாசம் சென்ற இராமனோடு கூடவே சென்ற இலட்சுமணனின் உதவிபோல இராஜேஸ்வரனின் உதவி இருந்தது.

ஜே.ஜே. நகர் எங்கே இருக்கின்றது என்பதையும் அங்கு எவ்வாறு செல்வ தென்பதையும் அறிந்து கொள்வதே எனது முதலாவது கடமையாகியது.

வழமையில் எங்காவது செல்வதாயின் திரு.ஜனகேஸ்வரனிடம் விசாரிப்பதே வழக்கம். இதுவிடயத்திலும் அப்படியே செய்தேன். அண்ணா நகரினூடாகச் செல்ல வேண்டுமென அவர் தெரிவித்தார்.

**ஜே.ஜே.நகர் புறப்பட்டோம்**

நானும் தம்பி இராஜேஸ்வரனுமாக ஜே.ஜே.நகருக்குப் புறப்பட்டோம். தமிழக முதல்வர் செல்வி ஜெயராமன் ஜெயலலிதாவின் முதலெழுத்துக்களைக் கொண்டதே ஜே.ஜே.நகராகும்.

தமிழகத்தில் உள்ள ஊர்களுக்கு இத்தகைய பெயர்களைச் சூட்டுவது ஓர் சாதாரண விடயம். அண்ணா நகர், எம்.ஜி.ஆர்.நகர், கலைஞர் கருணாநிதியின் பெயரிலான கே.கே. நகர் என அரசியல் தலைவர்களின பெயர்களிலான ஊர்ப்பட்டியல் நீண்டு செல்கின்றது. இதற்காக ஏற்கனவே இருந்த பெயர்கள் நீக்கப்படுவதும் அங்கு நடந்து கொண்டே இருக்கின்றது.

ஜே.ஜே.நகரில் இறங்கியதும் சற்றுத் தொலைவில் இருக்கும் மற்றாஸ் மெடிக்கல் மிசனுக்கு நடந்து சென்றோம். அழகான கட்டடம், எழில் மிகு பூச்செடிகளின் ஈர்ப்பு, நிகழ்வுக்கான மெல்லிய சோடனை, வருகை தந்தவர்களின் தரத்தை வெளிப்படுத்தும் உயர்தரக் கார்களின் தரிப்பு.

அந்தக் கண்கொள்ளாக் காட்சியை உள்வாங்கியபடியே மருத்துவமனையின் வரவேற்புப் பகுதியை அடைந்தோம்.

தினமணியில் இருந்து வருகின்றோம்.சொல்லி முடிப்பதற்குள் அமோக வரவேற்பு. மூன்றாம் மாடியில் நடைபெறும் நிகழ்வுக்காக எங்கள் இருவரையும் பணியாளர் ஒருவர் அழைத்துச் சென்றார். நாலாபுறமும் கண்ணாடிகள் பதிக்கப்பட்ட லிப்ற்றில் ஏறினோம். மூன்றாம் மாடியில் இருந்த குளிரூட்டப்பட்ட அரங்கைப் பார்த்ததும் அதிர்ந்து போனோம். ஒரு தனியார் மருத்துவமனையில் இப்படியொரு அரங்கா? இந்தக் கேள்வி மனதிற்குள் கும்மியது.

தமிழகத்தில் அழகுமிகு பொக்கிஷங்களைப் பார்க்கும் போதெல்லாம் எம் யாழ்ப்பாணமே நினைவுக்கு வரும். இப்படியொரு மருத்துவமனை யாழ்ப்பாணத்தில் இருந்தால்...,தன் தாய் மண் மீது கொண்ட பாசத்தின் விருப்பாக அந்த ஆசைகள் அடிக்கடி ஏற்படுவது நியாயமாயினும், ஒப்பீட்டு ஆசைகளால் என்ன பயன்.

மற்றாஸ் மெடிக்கல் மிசன் போன்றதொரு மருத்துவமனையை யாழ்ப்பாணத்தில் அமைப்பது பற்றி யாரேனும் சிந்திக்காமல் இருப்பது ஏன்? மதுபானசாலை கட்டுகின்றோம், அழகு மிகு ஹோட்டல் கட்டுகின்றோம், வானுயர்ந்த கோபுரம், கோடிக் கணக்கான செலவில் கோவில் நிர்மாணம் இதற்கெல்லாம் பணத்தைச் செலவிடும் யாழ்ப்பாணத்தில், சகல வசதிகளையும் கொண்டதொரு மருத்துவமனையை கட்டப்பட்டால், மனித உயிர்களைப் பாதுகாக்கலாமல்லவா?

இந்த நினைவுகள் மற்றாஸ் மெடிக்கல் மிசன் அரங்கின் ஆசனத்தில் இருந்தபோது என்னை ஆக்கிரமித்துக் கொண்டது.

(வளரும்)

# புலிகளுடனான யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படும்

## ஹரீம் பீரிஸ் தெரிவிப்பு

வெளியுறவுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலைக்கு அரசாங்கம் விடுதலைப் புலிகளைக் குற்றம்சாட்டி வருகின்ற பொழுதிலும் அவர்களுடனான யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் பேணப்படும் என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி ஆங்கில சேவைக்கு வழங்கிய செவ்வியிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் அச் செவ்வியில் மேலும் குறிப்பிடுகையில்,

இப் படுகொலை அமைதி நடவடிக்கைகளுக்கு நிச்சயமாக ஒரு பின்னடைவுதான். தமிழரான லக்ஷ்மன் கதிர்காமர் புலிகளைக் கடுமையாக விமர்ச்சித்துவந்த ஒருவர்.

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையோடு தங்களுக்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது என்று விடுதலைப்புலிகள் கூறுகின்றனர். சமாதானத்திற்கெதிரான வேறு பல சக்திகள் இலங்கையில் இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார் என்றார். (ரு-4)

# மரியன்னை அருள் பாலிக்கும்



460 ஆண்டுகளிற்கு மேல் பழமை வாய்ந்த மருதமடு அன்னையின் திருவிழா இன்று திங்கட்கிழமை மன்னார் மடு மாதா ஆலயத்தின் அபிசேகம் செய்யப்பட்ட

# மடுத்திருப்பதி

61வது வருடாந்த அபிசேக விழாவாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் திருநாள் திருப்பலி இடம்பெறவுள்ளது. இவ் வருடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் மடுத்திருவிழாவில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது!

மடுத்திருப்பதியானது சாதி, சமய வேறுபாடின்றி அனைவருக்கும் பொதுவானதொரு புன்னியஸ்தலமாக விளங்குகின்றது! அடர்ந்த காட்டின் மத்தியில் எழில் மிகு அன்னையாம் திருச்செபமாலை அன்னையின் மடுத்திருப்பதி தமிழீழ மக்கள் மாத்திரமன்றி இலங்கை வாழ் அனைத்து மக்களிற்கும் யாத்திரை தலமாக விளங்குகிறது.

61 வருடங்களிற்கு முன் யாழ். ஆயர் மேதகு கியோமர் ஆண்டகையின் திரு ஆட்சியின் கீழ் 1944 ஆம் ஆண்டு ஆனி மாதம் 25 ஆம் திகதி இவ்வாலயம் திருநிலைப் படுத்தப்பட்டு சிறப்பும், பொலிவும் பெற்று மாபெரும் யாத்திரை ஸ்தலமாக அபிசேகம் செய்யப்பட்டது.

1990ஆம் ஆண்டு தமிழ்ப் பிரதேசத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட கடந்தகால யுத்தத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இங்கு தஞ்சம் புகுந்தனர். அவர்களின் உயிர்காத்து உடல், உள, ஆன்மீக நலன் காத்தவள் மடுப்பதி மரியன்னை. மடு அன்னையின் திருத்தல வரலாற்றினை நோக்குமிடத்து,

'ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்பொழுது ஆண்டவருக்குள் ஒளியாய் இருக்கின்றீர்கள்'

(எபே 5:8)

### மடு அன்னையின் திருத்தல வரலாறு

16ஆம் நூற்றாண்டில்... இந்தியாவின் தென்கரை ஓரங்களில் வசித்த புதுக்கிறீஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை இலங்கைத் தீவின் கடற்கரை ஓரங்களில் விதைத்தனர். இந்தியாவில் பணி புரிந்த பிரான்சிஸ் சவேரியார் தனது பெயரைக் கொண்ட குரு ஒருவரை அனுப்பி வேதம் போதித்தார். இதனால் 600க்கும் அதிகமான ஆண், பெண்கள் சத்திய வேதத்தைத் தழுவிக் கொண்டனர். சங்கிலி அரசன் காலத்தில் அதிகமானோர் கொலை செய்யப்பட்டனர். கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்திற்கு தமது ரத்தத்தினால் முத்திரையிட்டனர் என்று சரித்திரம் கூறுகின்றது.

மன்னாரில் இருந்து ஆறு மைல்களுக்கு அப்பால் மாந்தை என்ற கிராமம் தான் மருதமடு மாதா சுரூபத்தின் ஆதி இருப்பிடமாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து ஒல்லாந்தருடைய ஆட்சியில் தான் கத்தோலிக்கருக்கெதிரான கொடூரமான வேதகலாபனை ஆரம்பித்தது. இதிலிருந்து விடுதலைபெற இருபது பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் சுரூபத்தைத் தூக்கிக்கொண்டு அடர்ந்த வன்னிக்காட்டில் அலைந்து திரிந்து இறுதியாக மடு அன்னையின் வழி நடத்தலில் மாந்தைக் கத்தோலிக்கர்கள் முதல் முறையாக மடுப்பிரதேசத்தில் திருச்சபையை நிலைநாட்டி வேத வித்தை விதைத்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலும் ஒல்லாந்தருடைய வேதகலாபனை தொடர்ந்திருக்க எழுநூறு கிறிஸ்தவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரியூடாக மருதமடுவிற்குச் சென்றனர். இந்த நாட்களில்தான் செபமாலை அன்னையின் சுரூபம் இருந்த இடத்தில் சிறு கோவில் ஒன்று யாழ்ப்பாணத்திலிருந்து தப்பி வந்த போர்த்துக்கேயகளகர்தனின் மகளாகிய எலேனா என்பவளால் கட்டப்பட்டது. இக்காட்டில் கோவில் கொண்ட அன்னை இக-பர நன்மைகளை வழங்கினாள். இப்பகுதியில் நச்சுப் பாம்புகள் தீண்டுவதில்லை என்ற நம்பிக்கையும் இப்பகுதியின் மண்ணை மருந்தாக மக்கள் பல்வேறு இடங்களிற்கும் எடுத்துச் செல்வது இதற்கு சிறந்த சான்றாகும்.

ஒல்லாந்தர் ஆட்சியில் அவர்கள் கைப்பற்றிய பிரதேசங்களில் கத்தோலிக்க குருமாரைத் துரத்தியதால் முப்பது ஆண்டுகள் பொதுநிலையினர் (1658-1686) விசுவாசத்தை வளர்த்தனர். அவ்வேளையில் கோவையில் இருந்து வருகைதந்த யோசேவாஸ் முனிவரும் அடுத்து வந்த தியான சம்பிரதாயக் குருக்களின் அருட்பணியால் வேதம் மீண்டும் புத்துயிர் பெற்றது. மீசாம்கள் தொடங்கப்பட்டன. 1706 இல் மருதமடு தலை மீசாமாக இருந்தது. ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்ததும் வேதகலாபனை இருள் ஒழிந்து இலங்கை கத்தோலிக்க உலகிற்கு ஒரு புதிய உலகம் விடிந்தது.

1870இல் புதிதாக நியமனம் பெற்ற ஆயர் பொஞ்சின் ஆண்டகையால் 1872 ஆனித் திங்கள் 8இல் அடிக்கல் நாட்டப்பட்டு மடு அன்னை ஆலய நிர்மானப் பணிகள் தொடர்ந்தது! அடுத்தடுத்து வந்த மெலிசன் ஆண்டகை, யூலன் ஆண்டகைகளால் அழகிய ஆலயம் அமைக்கப்பட்டு இப்பணி முற்றுப்பெற்றது. இதனைத் தொடர்ந்து அழகான கோவில் முகப்பும், விசாலமான குருமனையும், நற்கருணை சிற்றாலயம், லூர்து கெபியும் அமைக்கப்பட்டதுடன் பல கிணறுகளும் வெட்டப்பட்டன.

பரிசுத்த பாப்பரசர் பதினொராம் பத்திநாதரின் பிரதிநிதியாக கொழும்பு அதிமேற்றாணியாராகிய ஆசா, குடேற் ஆண்டகை 1924 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் கலந்துகொண்ட ஆடித் திருவிழா வில் மடு அன்னைக்கு முடிசூட்டினார். இது கியோமர் ஆண்டகையின் காலத்தில் நடைபெற்றது. அதோடு 1948 இல் அமல மரித்தியாகிகள் சபைக் குருக்கள் வருகைதந்த நூறாவது ஆண்டைக் கொண்டாடும் முகமாக மடுமாதாவின் சொரூபம் யாழ்.மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு பங்குகளிற்கும் கொண்டு செல்லப் பட்டது.

1944ஆம் ஆண்டு ஒரு யுத்தகாலமாக இருந்த போதிலும் மடு ஆலயத்தின் அபிசேக விழா ஆனி 25ஆம் நாள் யாழ் ஆயர் கியோமர் தலைமையில் அபிசேகம் செய்யப்பட்டது.

தொடர்ந்து அமிலியானஸ் பிள்ளையின் அளப்பெரிய பணி ஆரம்பமானது. 1947ஆம் ஆண்டு மடு அன்னையின் முடிசூட்டு விழாவின் பொன்விழா நினைவாக மடு அன்னையின் திருச்சொரூபம் 'புதுப்பித்து ஒப்புரவாவோம்' என்ற தலைப்பின் கீழ் யாழ் மறைமாவட்டத்திலுள்ள எல்லாப் பங்குகளிற்கும் இரண்டாவது தடவையாகவும் எடுத்துச் செல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1981ஆம் ஆண்டு மிகவும் முக்கியமானதொரு கால கட்டமாகும். இவ் வளவு காலமும் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் கீழ் இருந்த மடுத்திருப்பதி யாழ்-மறை மாவட்டத்திலிருந்து பிரிந்த மன்னார் மறைமாவட்டத்தின் பராமரிப்பின் கீழ் மாறியது. 30-07-81இல் ஆயராக அபிசேகம் செய்யப்பட்ட தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மன்னார் மறை மாவட்டத்தின் முதல் ஆயராக பொறுப்பேற்றுக் கொண்டார். புதிய மறை மாவட்டத்தை வழிநடத்தும் திட்டங்களை வகுத்திருந்தார்.

போரின் துன்ப நிகழ்வுகள் தொடருகின்ற வேளையில்தான் 1992 ஐப்பசி 20 ஆம் திகதி இராயப்பு யோசப் ஆண்டகை மன்னார் ஆயராக மடுப்பதியில் அபிசேகம் செய்யப்பட்டார். 'புத்துயிர் 2000' என்ற மேய்ப்புப் பணி மகாநாடு 'அருள் மாரி' புதுப்பித்தல் கடந்த காலங்களில் செயற்பட்டு வருகின்றது!

94ஆம் ஆண்டு மடுப்பதி ஆலய அபிசேக ஐம்பதாவது ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டதுடன் கடந்த வருடம் (2004) மணிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது.

### விசுவாசத்தின் ஊற்று

இதுவரை கடந்த கால வரலாற்றைப் பார்த்தோம்! அடுத்து வளர்ந்துள்ள விசுவாச வாழ்வினை நோக்கும் போது,

மடுத்திருப்பதியானது சுற்றுலாவுக்கான ஒரு இடமல்ல. மாறாக விசுவாசத்தின் ஊற்றாக விளங்குகிறது. பக்திப் பற்றுதலுடன் மன்றாடும் மகிமை நிறைந்த பூங்காவனமாக காட்சியளிக்கின்றது. இனம், மொழி, மதம் என்பவற்றிற்கு அப்பாற்பட்டு எத்தரப்பினரும் அருள் வேண்டி எட்டுத்திக்கிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்களிற்கு நன்மைத் தனங்கள், புதுமைகளை வழங்குகின்றாள் மடுஅன்னை! இதற்குச் சான்றாக இரண்டு புதுமைகளை கீழே குறிப்பிடுகின்றேன்.

*ஜோ. ஜெஸ்ரின்*
*கொழும்புத்துறை*

இஸ்லாமிய மத சகோதரர் தனது பன்னிரண்டு வயதுச் சிறுமி வாய் பேசாமலிருப்பது கண்டு அன்னையிடம் அசைக்க முடியாத நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் வந்து வழிபட்டார். அன்னையின் பதியிலிருந்து வீடுதிரும்பமுன் வாய் பேசாத அக்குழந்தை 'அம்மா' என்று கதைக்கத் தொடங்கியது. இதனால் மகிழ்ந்து பெற்றோர் அன்னைக்கு தமது செலவில் ஆலயக் கட்டடத்தை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இன்னுமொரு தந்தையின் கடிதத்தில் இருந்து: எனது மகள் நோயலின் 4 வயதில் ஏற்பட்ட நோயால் தன் கண்பார்வை இழந்தாள். பெரும் துயருடன் அன்னையை வந்து தொழுதோம். எமது யாத்திரையின் மூன்றாம் நாள் எனது மகள் ஆலயத்தில் ஒளிர்ந்த மின் தீபங்களை உன்னிப்பாகக் கவனித்தாள் என்ன ஆச்சரியம்! எமது வைத்தியரும் இதை அத்தாட்சிப்படுத்தினார்.

*(தந்தையின் கடிதம் 5.3.1949)*

விசுவாசத்தோடு, கண்ணீரோடு ஜெபித்தவர்கள் குணமாகியுள்ளனர். அன்னை மரியின் அளவு கடந்த அன்பினை வேண்டி விசேட விதமாக யுத்தம் தீரவும், வீண் உயிர் இழப்புக்களை தவிர்க்கவும் மன்றாடுவோம். அன்னையின் ஆசியால் நாட்டில் சமாதானமும், சகோதரத்துவமும், சமத்துவமும் நிலைக்க பிரார்த்திப்போம்.

---

**மண்கூட மருந்தாகும் புண்ணிய பூங்காவனம்**

*கலாபனைகள் கடந்து வந்து*
*காட்டுப் பகுதியில்*
*கருணை பொழியும்*
*அன்னையின் அருட்தலத்தில்*
*மண்கூட மருந்தாகும்*
*புண்ணிய பூங்காவனம்!*

*மாந்தையிலே தோன்றி*
*மடுப்பதியில் கோவில் கொண்டு*
*மைந்தன் கிறிஸ்துவைக் கரமேந்தி*
*விந்தையுடன் பக்தரைக் காத்து*
*விருட்சம் தருபவளே—எங்கள்*
*விண்ணகத்தரசியே மருதமடு*
*தாயாரே...!*

*தேரேறி வருமெங்கள் தாயே*
*எம் துயர் தீருமம்மா...*
*பாரினிலே சமாதானம் நிலைத்து*
*போராட்டங்களை விரட்டிடம்மா*
*அழிவுகள் இனிவேண்டாம்*
*அன்னை மரியே துணை செய்யம்மா*
*-தமிழ் உதயம்-*

---

## நிர்வாக சபை தெரிவு

(பொன்னாலை)

மண்கும்பான் - வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகராலய புனருத்தாரண அன்னதான சபைப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் சமீபத்தில் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

மணகும்பன் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைவராக செ.சிவலோநாதனும் உபதலைவராக வீ.வைத்திலிங்கமும் செயலாளராக ந.தனபாலசிங்கமும் உப செயலாளராக பொ.சந்திரசேகரம்பிள்ளையும் பொருளாளராக ச.சத்தியசீலனும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

மேலதிக 10 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். (அ-49)

## நெல்கொள்வனவை ஊக்குவிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அரிசி ஆலை உரிமையாளர்கள் சிறுபோக அறுவடையிலிருந்து கூடுதலான நெல்லைக் கொள்வனவு செய்வதை ஊக்குவிப்பதற்கு மேலும் உதவிவழங்க அரசாங்கம் முன்வந்துள்ளது.

கடந்த பெரும்போக அறுவடையிலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்த அடுத்த வருடம் மார்ச் மாதம் 15ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-7)

## மிதிவெடி செயற்பாட்டு வாரம்

(சில்லாலை)

யாழ்.வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தும் மிதிவெடி செயற்பாட்டு வார ஆரம்ப நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்துகொள்வார். (து-58)

## இலவச வகுப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கல்வித் தர வீழ்ச்சியினை ஓரளவேனும் உயர்த்தும் நோக்குடன் புங்குடுதீவு வட இலங்கை சர்வோதயத்தினால் கணிதம், விஞ்ஞான பாடங்களுக்கான இலவச வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. (ற-126)

---

# சக்தி ஒளிபரப்பில் தடங்கல்கள்

கடந்த பலமாத காலமாக யாழ்ப்பாணத்தில் சக்தி ஒளிபரப்புச் சேவையில் அடிக்கடி ஏற்படும் குளறுபடிகளால் பல தடங்கல்கள் ஏற்படுவதாக சக்தி ரி.வி பார்வையாளர்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

ஒளிபரப்பு நடந்து கொண்டிருக்கும் போதே அடிக்கடி சப்தம் இல்லாமல் போவது, அடிக்கடி திடீர் திடீரென ஒளிபரப்பு தடைப்படுவது போன்றவற்றால் மனச்சலிப்பு ஏற்படுவதாகவும் இவை தொழில்நுட்பக் கோளாறினால் ஏற்படுவதாக இருந்தால் அதைச் சீர் செய்து சேவையை திறம்பட நடத்த சக்தி நிறுவனம் நடவடிக்கை எடுக்காமல் வாளாவிருப்பது ஏன் எனக் கேள்வியெழுப்பும் பார்வையாளர்கள்,

இக்குறைபாடு விரைவில் நீக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமென எதிர்பார்ப்பதாகத் தெரிவிக்கின்றனர். (து)

# மாமுனை - வத்திராயன் பகுதிகளில் வெடிபொருட்கள் அகற்றப்பட்டுள்ளன

(திருநெல்வேலி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள மாமுனை தொடக்கம் வத்திராயன் வரையான பகுதிகளில் மிதிவெடிகள் மற்றும் பொறிவெடிகளும் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்அடிப்படையில் இந்தப் பகுதியில் நிரந்தர வீட்டுதிட்டப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க முடியும் என மனித நேயக் கண்ணிவெடி அகற்றல் பிரிவினர் சுனாமி அனர்த்த செயலகத்திடம் சான்றிதழ் வழங்கி உள்ளனர். (ற-43)

# செப்.மாதம் அமெ.வின் 3 நகரங்களை தகர்க்க அல்-கெய்டா சதித்திட்டம்

(வோஷிங்டன்)

அடுத்த மாதம் அமெரிக்காவின் 3 நகரங்களைத் தகர்க்க தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி அல்-கெய்டா தீவிரவாதிகள் விமானங்களை கடத்தி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உளள உலக வர்த்தக மையத்தை தகர்த்தனர்.

மீண்டும் இதேபோல தாக்குதல்களை நடத்துவோம் என்று தீவிரவாதி பின்லேடன் டெலிவிஷனில் தோன்றி மிரட்டல் விடுத்து வந்தான்.

அல்-கெய்டா தீவிரவாதிகள் அடுத்த மாதம் (செப்டெம்பர்) முதல் வாரத்தில் அமெரிக்காவின் 3 நகரங்களை தகர்க்க சதி திட்டம் தீட்டியிருப்பதாக உளவுத்துறைக்கு (எப்பிஐ) தகவல் கிடைத்துள்ளது.

நியூயோர்க், லொஸ்ஏஞ்சல்ஸ், சிகாகோ ஆகிய நகரங்களில் இந்தத் தாக்குதல்கள் நடைபெறலாம் என்று உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இந்த முறை விமானங்களை கடத்தாமல் எண்ணை டாங்கர் லாரிகளை கடத்தி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் அதை வெடிக்கச் செய்ய தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதைகவும் உளவுத்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது.

ஒரே நேரத்தில் இந்தத் தாக்குதல்கள் நடக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தீவிரவாதிகளின் சதித்திட்டம் பற்றி அதிக ஆதாரங்கள் கிடைத்திருப்பதால் உஷாராக இருக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ற)

# ஈரானின் அணுசக்தி திட்டம் ஆராய ஐ.நா குழுவொன்று தெஹ்ரான் சென்றது

(நியூயோர்க்)

ஈரானில் மேறகொள்ளப்படவுள்ள அணுசக்தித் திட்டங்கள் குறித்து விவாதிக்க ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி ஏஜென்சி ஒரு குழுவை ஈரானின் தலைநகர் தெஹ்ரானுக்கு நேற்று அனுப்பியது.

ஓராண்டுக்கு முன் யுரேனியம் செறிவூட்டல நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வதாக ஐரோப்பிய யூனியன் நாடுகள் மற்றும் அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையின் போது ஈரான் அறிவித்தது.

இந்நிலையில், யுரேனியத்தை எரிபொருளாக மாற்றும் பணியை இஸ்.்.பெஹான் என்ற இடத்தில உள்ள தனது அணு நிலையததில கடந்த திங்கடகிழமை ஈரான் தொடங்கியது.

யுரேனியத்தைச் செறிவூட்டி மின்சாரம் தயாரிக்கவும், அமைதி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தவும் தனது நாட்டுக்கு உரிமை இருப்பதாக ஈரான் திட்டவட்டமாக கூறியது.

ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இதை ஏற்க மறுக்கின்றன. ஈரானின் உண்மையான நோக்கம் அணு ஆயுதங்களைத் தயாரிப்பது தான் என்று அந்நாடுகள் கூறுகின்றன.

இதையடுத்து ஐ.நா தனது குழுவை ஈரானுக்கு அனுப்பி யுரேனியம் செறியூட்டல் திட்டத்தால் ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் கேடு, நாட்டின் பாதுகாப்பு, திட்டத்தின் நோக்கம், தன்மை குறித்து அந்நாட்டுடன் விவாதிக்க திட்டமிட்டுள்ளது. (ற)

## இங்கிலாந்தில்

# விமான சேவைகள் வழமைக்கு

(இலண்டன்)

இங்கிலாந்து நாட்டில் ஹீத்ரு சர்வதேச விமான நிலையம் உள்ளது. இங்கு 'கேட்கார் மெட்' என்ற நிறுவனம் உணவு சப்ளை செய்து வருகிறது. இந்த நிறுவனத்தில் வேலை பார்த்தவர்கள் சில கோரிக்கைகளை வலியுறுததி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து உணவு தயாரிக்கும் நிறுவனத்தில் பணியாற்றிய 800 ஊழியர்கள் அதிரடியாக டிஸ்மிஸ் செய்யப்பட்டனர்.

இதை அறிந்த இங்கிலாந்து நாட்டில் உள்ள மற்ற விமான நிலைய ஊழியர்களும் போராட்டத்தில் குதித்தனர். இதனால் விமான சேவை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. விமானப் பயணிகள் ஆங்காங்கே தங்கவைக்கப்பட்டனர்.

இந்தப் பிரச்சினையில் உடனடியாக இங்கிலாந்து அரசு தலையிட்டது. பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் அனைவரும் ஆசிய கண்டத்தைச் சோர்ந்தவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் என்பது தெரிய வந்தது. சில ஊழியர்கள் இந்தியத் தம்பதிகள்.

இதையடுத்து அரசுக்கும், நிர்வாகத்துக்கும் நடந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையில் ஊழியர்கள் டிஸ்மிஸ் நடவடிக்கை வாபஸ் பெறப்பட்டது. உடனே போராட்டத்தை விமான நிலைய ஊழியர்கள் கைவிட்டனர். இதையடுத்து இங்கிலாந்து நாட்டில் அனைத்து விமான நிலையங்களிலும் மீண்டும் விமான சேவை தொடங்கப்பட்டது. (ற)



தென் ஆபிரிக்காவின் கேப்டவுன் நகரில் பேஷன் ஷோ ஒன்று நடந்து வருகிறது. இதில் ஆபிரிக்க நாடுகள் முழுவதிலும் இருந்து ஆடை வடிவமைப்பாளர்கள் கலந்துகொண்டு புதுப்புது ஆடைகளை அறிமுகப் படுத்தினர். படத்தில் சிம்பாவே நாட்டின் சோனி மெக்லோஸ்கி என்ற ஆடை வடிவமைப்பாளரின் உடைகளை மாடல் அழகிகள் அணிந்து ஒய்யாரமாக வலம் வந்த காட்சியைக் காணலாம்.

# சிறைத்தண்டனையை எதிர்நோக்கும் நோபல் பரிசு விஞ்ஞானி!

(நியூயோர்க்)

கார் விபத்தில் ஒருவரது உயிரிழப்புக்குக் காரணமாக இருந்ததற்காக அமெரிக்க விஞ்ஞானி ஜான் ராபர்ட் ஷ்ரிப்பர் (74) சிறைத் தண்டனையை எதிர்நோக்கி காத்திருக்கிறார்.

இவர் இயற்பியல் துறையில் 1972 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றவர். கடந்த ஆண்டு செப்ரெம்பர் 24இல் இவர் கலிபோர்னியா மாகாணததில் வேகமாக கார் ஓட்டிச் சென்றுகொணடிருந்தபோது அவரது கார் ஒரு வான் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஒருவர் பலியானார். 7 பேர் காயமடைந்தனர்.

இவரது ஓட்டுநர் உரிமம் ஏற்கெனவே ரத்தச் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடததக்கது. விபத்து தொடர்பான வழக்கு சான்டாமரியா நீதிமன்றத்தில் நடந்துவந்தது.

இந்தவாரம் நடந்த விசாரணையின் போது ஜான் ராபர்ட் ஷ்ரிப்பர் தனது செயலுக்காக கண்ணீர்மல்க மன்னிப்புக் கோரினார்.

இருப்பினும் நீதிபதி ஜேம்ஸ் ஹெர்மன் அவருக்கு சிறைத்தண்டனை விதித்தார். வசதிகள் குறைந்த மாநிலச் சிறையில் தண்டனை அனுபவிக்குமாறு அவர் உத்தரவிட்டார். அங்கு அவருக்கான தணடனைக்காலம் முடிவு செய்யப்படும். (ற)

# இந்திய சுதந்திர தினம் இன்று தீவிர கண்காணிப்பில் பொலிஸார்

(சென்னை)

இன்று இந்திய சுதந்திரதின விழாவையொட்டி சென்னையில் ஹெலிகொப்டரில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அயோத்தியில் ராமர் கோவிலுக்குள் நுழைந்து தீவிரவாதிகள் தாக்குதல், லண்டன், கெய்ரோ குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து இந்தியாவில் சுதந்திர தினத்தை சீர்குலைக்க தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியது தெரியவந்தது. இது குறித்து இந்திய உளவுப் படையினர் அனைத்து மாநிலங்களுக்கும் பாதுகாப்பை பலப்படுத்த இரகசிய உத்தரவு பிறப்பித்தனர்.

சென்னை நகரில் சுதந்திர தினத்தையொட்டி 10 ஆயிரம் பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். மெரீனா கடற்கரை ஓரம் கடலோர காவல் படையினர் ஹோவர் கிராட் எனும் நவீன படகில் ரோந்து சென்று கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கடலோரப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலமும் கண்காணிக்க நடவடிககை எடுக்கப்பட்டுள்ளது. துறைமுகத்தில் உள்ள மிதக்கும் காவல்நிலைய பொலிஸாரும் ரோந்துப பணியில் ஈடுபடுவார்கள்.

சென்னை நகரில் மக்கள் நெரிசலான 50 இடங்களில் இரகசிய சுழலும் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் சந்தேகப்படும்படியாக செல்பவர்களை உடனுக்குடன் பிடிக்கமுடியும். சென்னையில் 40 இடங்களல் தற்காலிக சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நகருக்குள் நுழையும் வாகனங்களை தடுத்து நிறுத்தி பொலிஸார் தீவிர சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கிறார்கள். சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

ரயில் பயணிகள் மெட்டல் டிடெக்டர் சோதனைக்குப் பின்னர் உள்ளே அனுமதிக்கப்படுகிறாகள. அவர்களின் உடமைகளை பொலிஸார் திறந்து பார்த்தும் சோதனை நடத்துகிறார்கள்.

சென்ரல் ரயில் நிலையத்துக்குள் வரும் ரயல் பெட்டிகள் யார்டில் இருந்த சற்று தூரத்தில் நிறுத்தப்பட்டு மோப்ப நாய், மெட்டல் டிடெக்டர் மூலம் சோதனைக்கு பின்னர்தான் பிளாட்பாரத்துக்குள் அனுமதிக்கப்படுகிறது.

ரயில் நிலையத்துக்குள் ரயில்வே பாதுகாப்பு படையினர் துப்பாக்கியுடனும், ஆண், பெண் பொலிஸார் சாதாரண உடையிலும் நின்று கண்காணித்து வருகிறார்கள். (ற)

# சீனாவின் ஏவுகணைகளால் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல்

## தைவான் அதிபர் எச்சரிக்கை

(கான்பெரா)

சீனா தயாரித்துவைத்துள்ள அதி நவீன ஏவுகணைகளால் தைவானுக்கு மட்டுமன்றி அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கும் ஆபத்து விளையும் என்று தைவான் அதிபர் சென் ஷுய் பியான் எச்சரித்துள்ளார்.

கான்பெராவில் வெளியான பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே ஷுய்பியான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அதில் அவர் கூறியிருப்பதாவது, சீனா தயாரித்துள்ள ஏவுகணைகள் 10 கிலோ மீற்றர் தொலைவைச் சென்று தாக்கக்கூடியவை. இதனால் ஆசிய - பசுபிக் பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் ஆபத்து ஏற்படலாம் என்றார்.

இதேவேளை, தைவான் மீது பன்நெடுங்காலமாகவே சீனா உரிமைகொண்டாடி வருவது குறிப்பிடத்தக்கது. (ற)

## நல்லூர் ஆலயத்திற்கு செல்வோரை

# சைவ சமய கலாசாரத்தை அனுசரித்து நடக்குமாறு பெரியோர் வேண்டுகோள்!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய திருவிழாவிற்கு வருபவர்களில் சிலர் சைவசமயக் கலாசாரத்திற்குத் தகாதவகையில் நடந்து கொள்வதாக சைவப் பெரியோர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

ஆலய வீதிக்கு வரும் இளைஞர்களில் சிலர் பாதணிகளுடன் செல்கிறார்கள் எனவும் இப்படி ஆலய வீதிகளில் பாதணிகளுடன் செல்லும் இளைஞர்களைப் பாதணிகளை அகற்றி விட்டுச் செல்லும்படி ஆலயத் திருவிழாக் காலத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்கள் தெரிவித்த போதும், சில இளைஞர்கள் அதை செவி சாய்க்காமல் கேலித்தனமாக நடந்து கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, ஆலயத்திற்கு வரும் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் சைவசமய நடைமுறைக்கு ஏற்றபடி உடை அணிந்து வருகின்ற போதும், திருமணம் ஆன பெண்களில் சிலர் கழுத்தில் தாலியுடன் வெளிநாட்டு நாகரிகங்களுக்கு ஏற்றபடி இறுக்கமான உடைகளை அணிந்து ஆலயத்திற்கு உள்வந்து செல்கின்றார்கள்.

இப்படியான உடைகளை அணிந்து திருமணமான பெண்கள் ஆலயத்திற்கு வருவதால் சைவ சமய கலாசாரம் சீரழிக்கப்படு வதாக சைவப் பெரியார்கள் பலர் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, ஆலயத்திற்கு வருபவர்கள் சைவ சமய கலாசாரத்திற்கு ஏற்படி உடைகளை அணிந்து வருவதன் மூலமே எமது சைவ சமய கலாசாரத்தை பேணிக்காக்க முடியும் எனவும் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். (ற-19)

# கொள்ளைக் கோஷ்டி கைது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் ஒரு குழுவினரை சீதுவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு 6 சந்தேக நபர்கள் மாலியாவததை, மடக்குளி , ரதமலானை ஆகிய பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து இரண்டு வான்கள், 3 முச்சக்கரவண்டிகள் உட்பட பெருமதொகையான சிகரெட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற-19)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 34

பி.ஜே.ராஜய்யா

## மெய்யும் பொய்யும்!

ஈராக் அதிபரின் அலுவலக அறை.

சிம்மாசனம் போல் கம்பீரமாகக் காட்சியளிக்கும் ஆசனத்தில் சதாம் உசேன் அமர்ந்திருக்கிறார். வழக்கமான பச்சைநிற யூனிபார்ம் அணிந்திருக்கிறார்.

அவருக்கு எதிரே, மேஜைக்கு அப்பால் ஒரு சாதாரண நாற்காலியில் பிரபல பத்திரிகையாளர் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார் அவர் கேட்கும் கேள்விகளுக்கு சதாம் தனக்கே உரிய பாணியில் பதில் அளிக்கிறார்.



இடதுபுறம் நிஜ சதாம்-வலது புறம் டூப்

நேர்காணல் முடிந்ததும் சதாமிடம் குட்பை சொல்லிவிட்டு அந்த அறையை விட்டு வெளியில் வரும் பத்திரிகையாளர், வெளியே வராந்தாவில் சதாம் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து திடுக்கிடுகிறார்...

வேனில் எங்கோ அழைத்துச் செல்லப்படுவதற்காக அங்கு பத்துப் பதினைந்து பேர் கும்பலாகக் காத்திருக்கிறார்கள். அந்தக் கும்பலில் ஒருவராக சதாமும் இருக்கிறார். அதே முகம், அதே பச்சை நிற யூனிபார்ம்.

பத்திரிகையாளருக்கு ஒரே குழப்பம். அலுவலக அறைக்குள்ளிருந்த சதாம் நாம் வருவதற்கு முன்பாகவே நமக்குத் தெரியாமல் நம்மைக் கடந்து எப்படி வெளியே வந்தார்?

விடை தெரியாமல் தவிக்கும் பத்திரிகையாளர், பேசாமல் சதாமிடமே கேட்டுவிடுவது என்ற எண்ணத்துடன் அவரை நோக்கி நடக்கிறார். நெருங்கிச் சென்ற பிறகுதான் தெரிகிறது.

அது நிஜ சதாம் அல்ல, டூப் சதாம்.


ஆம், கொலை செய்யப்படும் அபாயம் சதா துரத்திக் கொண்டிருந்ததால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஹிட்லரைப் போலவே சதாமும் டூப்பைப் பயன்படுத்தினார்.

சதாமுக்கு டூப்பாக அவரைப் போலவே தோற்றம் கொண்ட நபர் தேர்ந்தெடுக்கப்படுவார். தேவைப்பட்டால் அவரது முகத்தில் லேசாய் பிளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்டு, அச்சு அசலான சதாமின் உருவத் தோற்றம் உருவாக்கப்படும். சதாமுக்குரிய நடையுடை பாவனைகளைப் பழகிக்கொள்ள அவருக்குப் பயிற்சி அளிக்கப்படும். இதெல்லாம் முடிந்த பிறகு பச்சைநிற யூனிபார்ம் உடுத்திக்கொண்டால் போதும்... டூப் சதாம் ரெடி.

மேலோட்டமாகப் பார்த்தால் போலி சதாமின் பணி சுலபமானது.

அதிபர் சதாம் வெளியே புறப்படத் தயாராகும்போது இந்த டூப்பும் கிளம்பத் தயாராக இருக்கவேண்டும். சதாம் எந்தவகைக் காரில் ஏறுகிறாரோ அதேவகையைச் சேர்ந்த இன்னொரு காரில் ஏறி அமர வேண்டும்.

அதிபர் மாளிகையில் இருந்து சதாமின் கார் வழக்கமாக எந்தப் பாதையில் செல்லுமென்று எதிர்பார்க்கப்படுமோ அந்தப் பாதையில் டூப்பின் கார் மெய்க்காப்பாளர்கள் சிலரது வாகனங்கள் பின்தொடர செல்லவேண்டும்.



டூப் சதாம்-ஆஸ்திரிய தலைவர் சந்திப்பு

அந்த நேரத்தில் சதாமின் கார் யாரும் எதிர்பார்க்காத வேறு பாதையில் சென்று, சேரவேண்டிய இடத்துக்கு பத்திரமாகப் போய் சேர்ந்துவிடும். அதே இடத்துக்கு வந்து சேரும் டூப் சதாம், வெளியே தலைகாட்டாமல் காருக்குள்ளேயே இரகசியமாக அமர்ந்திருக்க வேண்டும். அங்கிருந்து சதாம் புறப்படும்போது டூப் கார் மீண்டும் வழக்கமான பாதையில் பயணப்பட்டு அதிபர் மாளிகைக்குத் திரும்ப வேண்டும். இதற்குள் சதாமும் மாற்றுப் பாதையில் பாதுகாப்பாக வந்து சேர்ந்திருப்பார்.

இப்படித் தினமும் காரில் பயணிப்பது தவிர, சதாமின் உயிருக்கு அபாயம் உள்ள பொது இடங்களில் அவருக்குப் பதிலாக டூப்தான் மக்கள் மத்தியில் தோன்ற வேண்டும். நிஜ சதாம் என நம்பி மக்கள் பரவசப்படுகிற மாதிரி அவர் திறமையாக நடந்துகொள்ள வேண்டும்.

பார்க்க சுலபமான பணியாகத் தெரிந்தாலும், எதிரிகள் சதாம் என்று நினைத்து டூப்பை கொன்றுவிடக் கூடிய ஆபத்து எப்போதும் இருந்துவந்தது. சொல்லப்போனால் டூப் நியமிக்கப்படுவதே இந்த ஆபத்தை எதிர்கொள்வதற்குத் தானே. இதனால்தான் அவருக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்பட்டது. நிறைய வசதிகளும் செய்து தரப்பட்டன. எல்லாவற்றுக்கும் மேலாக, சதாமுக்காக உயிர்த் தியாகம் செய்யத் தேவையான மனஉறுதி, அரசியல் போதனை மூலம் அவருக்கு அளிக்கப்பட்டது.

சதாம் டூப்பைப் பயன்படுத்தும் விஷயம் வெளியே தெரிய ஆரம்பித்து பிறகு அவரது மேற்கத்திய எதிரிகள் ரொம்பத்தான் குழம்பிப் போனார்கள். சதாம் எந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும், அவரது எந்தப் படத்தைப் பார்த்தாலும் இது நிஜ சதாமா, போலி சதமா? என்று சர்ச்சையில் ஈடுபடுவது அவர்களுக்கு வாடிக்கையாகிவிட்டது. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதுபோல அமெரிக்கா-இங்கிலாந்து அரசுக்கு எல்லாமே டூப் சதாமாகத் தான் தெரிந்தது. அதனால்தான் அவர் கைது செய்யப்பட்டபோது கூட அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்புப் படையினர் அவருக்கு டி.என்.ஏ. சோதனையெல்லாம் நடத்தி உறுதிசெய்துகொள்ள நேர்ந்தது.

ஒரேநேரத்தில் டஜன் கணக்கான டூப்புகளை சதாம் வைத்திருந்ததாக அவரது எதிரிகள் இப்போதும் நம்புகிறார்கள். ஆனால் எந்தவொரு காலகட்டத்திலும் சதாமுக்கு ஒரு டூப்புக்கு மேல் இருந்ததில்லை. தனது ஆட்சிக்காலத்தில் மொத்தம் நான்கு டூப்புகளை அவர் பயன்படுத்தினார் என்கிறது ஒரு புள்ளிவிபரம்.

சதாம் தனது டூப்பை டி.வி.யில் பேசவோ, மேடையில் உரை நிகழ்த்தவோ அனுமதித்ததில்லை. எனினும் எரிச்சலில் வேறொரு காரியத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார்.

ஆஸ்திரிய நாட்டின் வலதுசாரித் தலைவர் ஜோர்க் ஹைடர் ஒருமுறை பாக்தாத் வந்திருந்தார். சதாம் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்த அவர் சதாமை நேரில் சந்திக்க விருப்பம் கொண்டார். ஆனால் சதாம் அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார். ஹைடரோ பிடிவாதமாய் ஒற்றைக்காலில் நின்றார். கடைசியில் சதாம் சம்மதித்தார். சந்திப்பு நடந்தது. பூரிப்புடன் ஹைடர் தாயகம் திருப்பினார். சதாமைச் சந்தித்த அனுபவம் பற்றி தன் நாட்டுப் பத்திரிகைகளுக்கு புளகாங்கிதத்துடன் பேட்டி கொடுத்தார். பின்னர்தான் தெரிந்தது... அவர் சந்தித்தது நிஜ சதாமை அல்ல போலி சதாமை என்று.

சதாம் டூப்பைப் பயன்படுத்தினார் என்பது தவிர வேறொரு விமர்சனமும் அவர் மேல் உண்டு.

ஈராக்கில் எங்கு பார்த்தாலும் சதாமின் படங்களும் சிலைகளும் எக்கச்சக்கமாக வைக்கப்பட்டிருந்தன.

ஏன்...?

(தொடரும்)

## நல்லூரான் திருவடிக்கு

### இன்று ஆறாம் திருவிழா



### திவ்வியனே! திருக்குமரா!

கருணையின் வடிவமாக
களம்பல கண்டகந்தன்
திருவடி காணக்கூட்டம்
திரள்வதைத் தீட்டும்நல்லை!

நல்லைத் திருத்தலத்தில்
நாளும் அருள்சுரக்கும்
வல்லவடி வேலவனின்
வலிமை யெமைப்புரக்கும்!

புரக்கும் தொழிலோங்க
புன்மை தமைக்களைந்து
திரைக்குள் மறைந்தொளிரும்
திவ்வியனே! திருக்குமரா!

திருக்குமரா! உன்னாட்சி
திகழ்கின்ற நல்லையிலே
மருக்கொழுந்தாய் நீயிருந்து
மாநிலத்தைக் காத்திடப்பா!

*சாலையம்பதி கே.மகேஸ்வரி*

### தமிழ் இனத்தைத் தத்தெடுக்க வருகிறான்

அள்ளி மலர் தூவி அந்தணர்கள் வாழ்த்த
வள்ளி மண வாளன் வாஞ்சையுடன்
வருகிறான்
தெய்வ யானையோடும் தெய்வமகன்
வருகிறான்
ஆனைமுகன் தம்பியவன் வீதியுலா
வருகிறான்
தமிழ் இனத்தைத் தத்தெடுக்க தங்கவேலன்
வருகிறான்
அவல வாழ்வின் துயரைப்பார்க்க ஆறுமுகன்
வருகிறான்
சித்தர் முத்தர் தவமிருந்த நல்லை நகரிலே
கோவில் கொண்ட கந்தவேலன் தத்தெடுக்க
வருகிறான்

*மு.விக்னேஸ்வரன்*

### ‘வடிவேலவனே சரணம்’

“திருநல்லைப் பதியினிலே கோவில் கொண்ட
தெள்ளுதமிழ் காவலனே முருகா சரணம்
வண்ணமயில் மீதேறி தங்கவேல் கையிலேந்தி
வீதிஉலா வரும் எழில் கந்தா சரணம்
எம் பழவினைகள் அறுத்து புதுவாழ்வு
தந்து அருள் புரியும் வேலா சரணம்
பக்தியுடன் தினமும் அடியவர்கள் பரவசமுடன்
போற்றித் துதித்து ஏற்றும் ஆறுமுகா சரணம்
கதியே நீ என்று உனை நாடி நிற்கும்
எமக்கு அருள் பொழிந்திடுவாய் வடிவேலா
சரணம்”

*நயினை விஜயன்*

### நல்லையில் வாசா

பல்லவி

நல்லையில் வாசா ஞானப்பிர காசா

அநுபல்லவி

நல்ல தெய்வானை வள்ளியம்மை சமேதா
நரர் சுரர் பணி ஞான பண்டி தாபரா (நல்லை)

சரணம்

நான் உன்னை நம்பினேன் நல்குரவு பிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்
தேன் உந்து வேங்கையாய்த் தினைப்புனம் நின்றனை
ஸ்ரீராமன் மருகனே முருகனே கிருபாகரா
(நல்லை)

*சிவயோகசுவாமிகள்*

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல் - குறள்

வலம்புரி

## சமாதானத்தை வலியுறுத்தும் கொலைச் சம்பவங்கள்

இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டில் பலியான வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறவுள்ளன.

அமைச்சர் கதிர்காமரின் மறைவுக்கு இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தமது கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளன.

கவலைகளும் கண்டனங்களும் தெரிவிக்கப்படுவது சம்பிரதாயமான நிகழ்வுகளாயினும், இத்தகைய, அவல மரணங்கள் ஏன் இடம்பெறுகின்றன, இதனை நிறுத்துவதற்கான வழிமுறைகள் இல்லையா? என்பது பற்றி ஆராய்வதில் உலகநாடுகள் கவனம் செலுத்துவதும் அவசியமாகும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்ற வேளையில் நாடுபூராகவும் ஆங்காங்கே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தினசரி இடம்பெறுகின்றதெனில், யுத்தநிறுத்தம் நிரந்தர சமாதானத்தை தரமாட்டாது என்பது உறுதியாகின்றது.

ஆக, இலங்கைத் தீவில் சண்டை ஓய்ந்து பயப்பீதியற்ற மனித வாழ்வும், நிம்மதியும் நிலைக்க வேண்டுமாயின், நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே ஒரேவழியாகும்.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்ற வக்கிரத்தால் எல்லா இனமக்களுமே கதிகலங்கிப்போகுமளவிற்கு நாட்டின் நிலைமை மோசமடைந்துவிட்டது. இந்நிலையை மாற்றியமைப்பதற்கு அரசும் விடுதலைப்புலிகளும் விட்ட இடத்தில் இருந்து சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

கடந்த பல வருடங்களாக சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ்மக்கள் மீது நடத்திய அட்டூழியங்கள், அக்கிரமத்தனங்களால் தமிழ்- சிங்கள உறவுகள் மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளன.

சிங்கள மக்களும், தமிழ்மக்களும் ஒன்றுசேர்ந்து வாழமுடியும் என்ற நம்பிக்கைகள் வலுவிழந்து போயுள்ளன.

இது எக்காலத்திலும் சாத்தியப்படாதென்பதே நிஜம். தமிழ்-சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற விருப்பம் சிங்கள அரசுகளுக்கு இருக்குமாயின், வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் அரசு உருவாக்கப்படவேண்டும். அந்த அரசே இலங்கையென்ற பதத்தை சிதறடிக்காமல் பாதுகாத்துக் கொள்ளும்.

இதை விடுத்து கடந்த கால ஏமாற்று வித்தைகளே! மீண்டும் நடக்குமாயின் மிக்விரைவில் நாடு பாரிய யுத்தத்திற்கு முகம் கொடுப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

இரண்டு இன மக்களும் ஒற்றுமையாக வாழும் காலம் கடந்து விட்டது. இரண்டு அரசுக்கான பலம் இலங்கையில் உருவாகி விட்டது. இதனால் வடக்கு கிழக்கு இணைந்த அரசை அமைத்து தமிழ் மக்களின் உரிமையைப் பாதுகாப்பதே இலங்கை இரண்டாகப்பிளவுறுவதைத் தடுக்கக்கூடிய கடைசி வாய்ப்பாக இருக்கும்.

எனினும் ஜே.வி.பி.போன்ற பேரினவாத அமைப்புகள் தமது தனிப்பட்ட அரசியல் நலனை மட்டும் சிந்தித்துக்கொண்டிருப்பதனால், அவர்கள் தொடர்ந்தும் இனயுத்தத்தையே விரும்புவர்.

அமைச்சர் கதிர்காமரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்த ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ சமாதானத்திற்காக, விடுதலைப்புலிகளிடம் அரசு மண்டியிடுவதாகக் கூறியிருந்தார்.

இவ்வாறு அவரின் கருத்து முன்வைக்கப்படுவதன் பொருள் சமாதானத்தை விடுத்து அரசு சண்டையை ஆரம்பிக்கவேண்டுமென்பதாகும்.

அழிவுகளின் மத்தியிலும் இன்று வரை யுத்தத்தை விரும்பும் ஜே.வி.பி.போன்றவர்களைத் தூக்கியெறிந்து சமாதானத்தை ஆரம்பிப்பதே தொடர்ந்தும் இழப்புகள் ஏற்படுவதைத் தடுக்கும் வழிமுறையாகும்.

# அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையை புலிகள் செய்ததற்கான ஆதாரங்கள் இல்லை

## க.கா. குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலைக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்புகள் இருப்பதற்குரிய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் கூறியுள்ளார்.

கதிர்காமரின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என வெளியிடப்பட்டுள்ள செய்திகள் குறித்து கருத்து வெளியிடும்போதே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரூப் ஹொக்லண்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான கொலைச் சம்பவங்கள் இடம்பெறும் போது எழுந்தமானமாக இவ்வாறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவது வழமையே என்றும் ஆனால் விடுதலைப் புலிகள் தான் இந்தக் கொலைக்குக் காரணம் என்று எவரும் இதுவரை உறுதிப்படுத்தவில்லை என்றும் அவர்குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ள நிலையில் ஒரு தரப்பினர் மறுதரப்பினர் மீது இவ்வாறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது யுத்த நிறுத்தத்தை பாதிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கதிர்காமரின் கொலைச் சம்பவம் கண்டிக்கத்தக்கது என்றும் இதற்குரிய கொலையாளிகள் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள அவர் இந்தக்கொலை தொடர்பான உண்மையான குற்றவாளிகள் அடையாளம் காணப்படும்வரை எந்த ஒரு தரப்பினரையும் குற்றம் கூறாமல் இருப்பதே சிறந்தது என்றும் தெரிவித்துள்ளார். (ற)

# ஜனாதிபதியின் பதவிக்காலத்தில் சிக்கல்; முடிவெடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கே!

## ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் குறித்து சிக்கல் தோன்றியுள்ளது எனில் அது தொடர்பான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு மாத்திரமே உண்டென எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் அதிகாரத்தை ஒருபோதும் இல்லாமல் செய்யமுடியாது அவ்வாறு செய்ய முயல்வது சட்டவிரோதமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

குருநாகல் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து பிரச்சினை எழுந்தால் பாராளுமன்றம் தனது சிறப்புரிமையையும் நீதிமன்ற அதிகாரத்தையும் பயன்படுத்தி முடிவினை எடுக்க நேரிடும் இதுவே பாராளுமன்றத்துக்கு உள்ள சிறப்புரிமையாகும்.



பாராளுமன்றத்துக்கு முழுமையான நீதிமன்ற அதிகாரம் உள்ளது. இதனை அரசியலமைப்பும் உறுதிப்படுத்தியுள்ளது.

2001இல் அனுரா பண்டாரநாயக்க சபாநாயகராக இருந்தபோது பாராளுமன்றத்தின் செயற்பாடுகளில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது என்று கூறியிருந்தமையையும் ரணில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-8)

# சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிர்ப்பு

# கப்பலை முற்றுகையிட மீனவர் முயற்சி

(வேதாரண்யம்)

சேது சமுத்திரத் திட்ட அகழ்வுப்பணி கப்பலை முற்றுகையிடப் போவதாக தெரிவித்து, கடற்கரையோரம் குவிந்த மீனவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

சுற்றுச்சூழல் பேரழிவு,கடல் வாழ் உயிரினங்கள்அழிவு பொருளாதார ரீதியாக நஷ்டம் ஏற்படுத்தும் என்பதால் கடந்த 140 ஆண்டுகளாக கிடப்பில் கிடந்த சேது சமுத்திரத்திட்டம் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டம் அறிவித்தது முதல் மீனவர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இருந்தும் மத்திய அரசு திட்டத்தை அமுல்படுத்தி வருகிறது. இதனால் தமிழீழ கடலோர மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களின் வாழ்வுரிமை, வாழ்வாதாரம் பறிக்கப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் இத் திட்ட அகழ்வுப் பணியை எதிர்க்கும் வகையில் சென்னை, தூத்துக்குடி, நாகை போன்ற கடலோர மாவட்ட மீனவர்கள்,சேது சமுத்திரக் கால்வாய்த்திட்ட எதிர்ப்பு இயக்கத்தினர் நாகை மாவட்டம் வேதாரண்யம் அடுத்த ஆறு காட்டுத்துறையில் கூடினர். அகழ்வுப் பணியில் ஈடுபட்டுள்ள கப்பலை முற்றுகையிடும் நோக்குடன் கடந்த வெள்ளிக்கிழமை காலை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகப் பாதுகாபபு, மீனவர்கள் வாழ்வுரிமை, மீனவர்களின கடல் மீதான உரிமை, கடல் உயிரினப் பாதுகாப்பு, கடலாதாரப் பாதுகாப்பு, சுற்றுச் சூழல் மற்றும் உயிரியல் பாதுகாப்புப் போன்றவற்றை வலியுறுத்தி நடந்த போராட்டத்திற்கு ஆறு காட்டுத்துறை கிராமத் தலைவர் மனோகரன் தலைமை வகித்தார்.

கப்பலை முற்றுகையிட கடலுக்குள் படகில் செல்ல முயனறவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தினர். (ற)

# விடுதலைப் புலிகளின் மறுப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## -அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையில தமக்குத் தொடர்பு எதுவும் கிடையாது என்று புலிகள் மறுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவிதது்ள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை சமாதான செயற்பாடுகளுக்குப் பாரிய தடையாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

தமக்கும் கதிர்காமரின் கொலைக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என புலிகள் தெரிவித்தமைக்குப் பதிலாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், புலிகளுக்கும் இக் கொலைக்கும் எந்தவித தொடர்பும் கிடையாதென புலிகள் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

இச் சம்பவம் அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதான செயற்பாடுகளுக்கு பாரிய தடையாக அமைந்துளளது. அதேபோல் தற்போது உள்ள விடயங்களின் அடிப்படையில் புலிகள அமைப்பே இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

ஜனாதிபதி பாதுகாப்பு சபைக் கூட்டத்தை நடாத்தி அவசர கால நிலைமையை பிரகடனப்படுத்தியுள்ளார். கொலையுடன் தொடாபுடையவர்களை கைதுசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று போர் நிறுத்த ஒப்பந்தமும் எந்தவித அச்சுறுத்தல் வந்தாலும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

## தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

நம்மை தமது பணியாளராகக் கடவுள் படைக்கவில்லை. நாமும் கடவுளுக்கு சமமானவர்கள். நண்பர்கள் என்று தெரிந்துகொள்ளும் போது சமத்துவத்தையும், சுதந்திரத்தையும் நாம் அடைகிறோம். நித்தியமான பரம்பொருளிடமிருந்து இம்மியளவு நாம் விலகி இருக்கும் வரை அச்சம் நம்மை விட்டு அகலாது.

சுவாமி விவேகானந்தர்

# கதிர்காமரின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை

## கூட்டமைப்பை சாடுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

சுட்டுக்கொல்லப்பட்ட அமைச்சர் கதிர்காமரின் படுகொலைச் சம்பவத்தை ஐக்கிய தேசியக்கட்சி வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது விடயம் தொடர்பில் கட்சி விடுத்துள்ள அறிக்கையில்,கதிர்காமரின் கொலை தொடர்பான விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க தவறும் பட்சத்தில் யுத்தநிறுத்தம் தொடர்பில் பாதிப்பு ஏற்பட இடமுண்டு. ஐக்கிய தேசியக்கட்சின் ஆட்சிக்காலத்தின் போது கதிர்காமரின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

கூட்டமைப்பு அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் அமைச்சர் கதிர்காமரின் கொலைக்கு அச்சுறுத்தல் நிலவியது. இதனையடுத்து அவருக்கான பாதுகாப்பு பலப்படுத் வேண்டிய அவசியம் குறித்து ஐக்கியதேசியக்கட்சி பல முறை சுட்டிக்காட்டியிருந்தது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ற-8)

# ஜனாதிபதி வேட்பாளர்தொடர்பில் ஜே.வி.பியின் தீர்மானத்தில் மாற்றமில்லை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிறிதொரு வேட்பாளரை நிறுத்துவது பற்றி ஜே.வி.பி. தற்போது எடுத்துள்ள தீர்மானத்தில் எதுவித மாற்றமும் இல்லை என அக்கட்சி வட்டாரத் தகவல் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி வேட்பாளராக ஏனைய கட்சிகளினால் நியமிக்கப்பட்டிருக்கும் வேட்பாளர்களின் கொள்கைகள் தெளிவாக இல்லாமையே அதற்குக் காரணம் என அந்த வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் யாரெனப் பார்க்காது கொள்கைகளுக்காக நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் அரசியல் பீடக் கூட்டத்தின் போதும் இது குறித்துப் பேசப்பட்டுள்ளது. தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதென முன்னர் எடுத்த தீர்மானத்தில் எதுவித மாற்றங்களும் இல்லை எனக்கூறப்படுகிறது. ஜனாதிபதித் தோதல் எப்போது நடை பெறும் என அறிவிக்கப்பட்ட பின்னர் தங்கள் வேட்பாளர் குறித்து அறிவிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அந்தக் கட்சி தொவித் துள்ளது.

(ற)

# மாகாண விளையாட்டுப் போட்டி யாழ்.மாவட்ட அணி முதலிடம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான மாகாண மட்டப் போட்டியில் 2005ம் ஆண்டிற்கான சகல துறை விளையாட்டிற்கான கேடயத்தை 141 புள்ளிகளைப் பெற்று யாழ்.மாவட்ட அணி பெற்றுள்ளது.

85 புள்ளிகளைப் பெற்று திருகோணமல்ல மாவட்ட அணி இரண்டாம் இடத்தையும், 82 புள்ளிகளைப் பெற்று மட்டக்களப்பு மாவட்ட அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. இதேபோன்று வவுனியா மாவட்ட அணி 66.5 புள்ளிகளையும், மன்னார் மாவட்ட அணி 63புள்ளிகளையும், அம்பாறை மாவட்ட அணி 17 புள்ளிகளையும், முல்லைத்தீவு மாவட்ட அணி 9.5 புள்ளிகளையும் கிளிநொச்சி மாவட்ட அணி 7 புள்ளிகளையும் பெற்றுள்ளது.

இதேவேளை வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நேற்றும், நேற்று முன்தினம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் தடகளப்போட்டிகள் நடாத்தப்பட்டது. இதில் 6 புதிய சாதனைகள் நிலை நாட்டப்பட்டுள்ளன.

இது வரை நீளம் பாய்தல் ஆண்கள் பிரிவில் 7.06 மீற்றர் ஆக இருந்த சாதனையை திருகோணமலையைச் சேர்ந்த ஆர்.ரதீசன் 7.07m பாய்ந்தும், தடி ஊன்றிப்பாய்தலில் ஆண்கள் பிரிவில் 3.50m ஆக இருந்த சாதனையை திருகோணமலையைச் சேர்ந்த ஆர்.ரதீசன் 3.51 m பாய்ந்தும் , தட்டெறிதல் பெண்கள் பிரிவில் 26.67m ஆக இருந்த சாதனையை கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ்.தாரணி 29.30 m எறிந்தும், 100 m தடை தாண்டல் நிகழ்வில் 17.7 செக்கனாக இருந்த சாதனையை யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.தயாளினி 17.5 செக்கனில் முடித்தும், குண்டெறிதல் பெண்கள் பிரிவில் 8.93 ஆக இருந்த சாதனையை யாழ்.மாவட்டத்தைச்சேர்ந்த தர்சினி 9.74 m எறிந்தும், ஈட்டி எறிதலில் 30.31 m ஆக இருந்த சாதனையை கிளிநொச்சியைச் சேர்ந்த எஸ்.தாரணி 33.19 எறிந்தும் சாதனை படைத்துள்ளார்கள்.

(இ-19)

# மிதிவெடி செயற்பாட்டு வாரத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று முதல் எதிர்வரும் 21ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்டுள்ள மிதிவெடி செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு யுனிசெப் அனுசரணையுடன் சர்வோதயம் பல்வேறு நிகழ்வுகளை நடாத்தவுள்ளது.

நாளை சுழிபுரம் மேற்கு அம்பாள் சனசமூக நிலைய முன்றலில் சிரமதானப்பணியும் இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் சர்வோதய மாவட்ட நிலையத்தில் வைத்து சர்வோதயத்தின் யாழ்.மாவட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.கே.சிவசுப்பிரமணியம் மதிவெடியால் பாதிக்கப்பட்ட 50 பேருக்கு சுயதொழில் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி பாண்டை ,எவட்டை ,சுழிபுரம் திருநாவுக்கரசு முன்பள்ளியில் சிரமதானப் பணி நடைபெறவுள்ளது. அத்துடன் எதிர்வரும் 18,19,20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சிங்களமகாவித்தியாலயத்தில் மிதிவெடி அபாயக்கல்வி சம்பந்தமான கண்காட்சியும் எதிர்வரும் 21 ஆம் திகதி கைதடி வயோதிபர் இல்லத்தில் சர்வோதய சேவையாளர்களால் சிரமதானப்பணியும் மேற்கொள்ளப்புடவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(ற-19)

# கதிர்காமரின் இறுதி நிகழ்வில் உலகத்தலைவர்கள் பங்கேற்பு

(கொழும்பு)

கொலை செய்யப்பட்ட அமைச்சர் கதிர்காமரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்வதற்காக வெளிநாட்டுத் தலைவர்கள், இராஜதந்திரிகள்,அமைச்சர்கள் பலரும் இன்று கொழும்பிற்கு வருகைதரவுள்ளனர்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்சன் ,பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கீசன், இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜீ, இந்திய வெளிநாட்டு அமைச்சர் நட்வர்சிங் ஆகியோரும் வருகைதரவுள்ளனர்.

அத்துடன் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களும் தென்னாசிய நாடுகளின் பிரதிநிதிகளும் இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதவற்காக இன்று கொழும்பிற்கு வருகின்றனர்.

(இ-8)

# போராட்டம் கைவிடப்பட்டது

(கண்டி)

மேல்கொத்மலைத் திட்டத்தை கைவிடுமாறுகோரி கடந்த வியாழக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப்போராட்டம் நேற்றுப் பிற்பகல் தற்காலிகமாக கைவிடப்பட்டது.மின் சக்தி எரிச்சக்தி அமைச்சு வழங்கிய உறுதி மொழியின் அடிப்படையில் மேற்படி உண்ணாவிரதப்போராட்டம் கைவிடப்பட்டது.

(ந-8)

# குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இருபாலைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் வாள்வெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் நேற்று இரவு அனுமதிக்கப்பட்டார்.

அதேஇடத்தைச்சேர்ந்த எஸ்.இராசன் (வயது 41) என்பவரே வாள்வெட்டிற்கு இலக்கானவர் ஆவார்.

(இ-8)

## புலிகளின் மட்டு...

தலை நடத்தியவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையம் ஊடாகவே தப்பிச் சென்றதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அவ்வாறு அவர்கள் தப்பிச்செல்லும் போது பொலிஸார் எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச்சென்ற பின்னரே பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற அலுவலகத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(ந-8,9)

## கதிர்காமர்...

தம்முடன் வைத்திருப்பது பாதுகாப்பானது என்றும் இராணுவப்பேச்சாளர் தயா ரட்னாயக்கா தெரிவித்தார். இதேவேளை கொலையுடன் தொடர்புடையவர்களை கைது செய்து அவர்கள் மீதான விசாரணைகள் வடக்கு,கிழக்குப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக கூறிய தயாரட்னாயக்கா,பொலிஸாருக்கும் படையினருக்கும் உதவியாக புலனாய்வுத்துறையினரும் ஈடுபட்டுள்ளனர்.

கொலைபற்றி பல்வேறு கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய கொழும்பில் பலத்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடையாளம் காணப்பட்ட இடங்களிலும் சந்தேகத்திற்குரிய இடங்களிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்காலத்திலும் இச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இச் சோதனை நடவடிக்கைகள் நாடுமுழுவதும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-8)

திருமணக்கார் (குளிரூட்டியது)
வாடகைக்கு



☆ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
☆ விசேட வைபவங்கள்
☆ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467
(த-9843)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
இன்று முதல்
பிரசாந், சிம்ரன் நடித்த
தமிழ்
கா.நே.11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா | யாழ்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின அதிரடிவெளியீடு
மாதவன், சதா, கோவை சரளா நடித்த




கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு
சேர்ந்து கலக்கும்
கா.நே 10.30, 02.30 06.30 09.3




வெகுவிரைவில்
ஜெய் ஆகாஷ், சிம்ரன் நடிப்பில்
கிச்சா வயது 16

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.